பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00



ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.



சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 13 | புதன்கிழமை | (26-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 159




## பிரதி அமைச்சரின் வருகையை எதிர்த்து யாழ்.செயலகம் முன் நேற்று மறியல்

### சந்திப்புக்களைக் கைவிட்டுத் திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகத் துறைப் பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீனுடனான சந்திப்புக்கள் யாவும் நேற்று இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டன.

நேற்று உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தந்த ஊடகத் துறைபிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் பிற்பகல் 2.30மணியளவில் யாழ். செயலகததில் வைத்து குடாநாட்டு ஊடகவியலாளர்களையும் அரச அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இந் நிலையில் தமிழ் மக்களின அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய தீர்வுகளை முன்வைப்பதற்கு பின்னிற்கும் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பிரதி அமைச்சரான இஸ்ஸதீனின் வருகையைப் பகிஷ்கரிப்புச் செய்யுமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க யாழ். பல்கலைக் கழக மாணவர்கள், யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினர் மற்றும் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இணைந்து யாழ். செய

(12ஆம் பக்கம் பார்க்க)

### அபிவிருத்தி குறித்து புலிகளுடன் பேசவேண்டிவராது

## இந்திய அரசின் உதவித் திட்டங்களை வைத்து 'றோ' ஊடுருவுகிறது என அர்த்தப்படுத்தலாமா?

### இந்தியத்தூதுவர் நிரூபம்சென் கேள்விக்கணை

(கொழும்பு)

**இலங்கையுடன் கொண்டுள்ள நட்புறவின்அடிப்படையில் இந்திய அரசாங்கம் வழங்கிவரும் உதவிகளைப் புத்திஜீவிகளும், தமிழ் ஊடகங்களும் பிழையான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளக்கூடாதென இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் நிரூபம்சென் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அமைந்துள்ள இந்தியக் கலாசார நிலையத்தில் வைத்து நேற்று யாழ்ப்பாண பாரம்பரிய கலாசார அமைப்பிற்கு ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான இசைக் கருவிகளை நன்கொடையாக வழங்கி உரையாற்றும் போதே அவர் இதனைத் தொிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

இலங்கையுடன் கல்வி, விஞ்ஞானத் தொழில் நுட்பம் மற்றும் கலை பண்பாட்டு விடயங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள பரஸ்பர உடன்பாட்டுக்கு இணங்க இந்தியா பல்வேறு உதவிகளை இலங்கைக்கு வழங்கிவருகின்றது.

இந் நிலையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும், உதவிகளையும் வழங்கிவரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியரின் கொலைக்கு புலிகள் பலத்த கண்டனம்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் குமாரவேல் தம்பையா சுட்டுக் கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் கேட்டுள்ளார்.

இக் கொலை தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

கிழக்குப் பல்கலைக்கழக

(12ஆம் பக்கம் பார்க்க)

### உப்புமா வழங்கப்பட்டதன் எதிரொலி

## வவு.தேசிய கல்வியியல் கல்லூரியைவிட்டு 122 சிங்கள மாணவர்கள் வெளியேற்றம்

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் இருந்த 122 சிங்கள மாணவர்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி கல்லூரியில் இருந்து வெளியேறி தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

கல்லூரியில் வழங்கப்படும் உணவு தொடர்பாக சிங்கள மாணவர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டையடுத்தே அவர்கள் தமது வீடுகளுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி கல்லூரியில் இருந்து வெளியேறியுள்ளதாகப் பீடாதிபதி தெரிவித்துள்ளார். சுயமாகக் கல்லூரியை விட்டு வெளியேறிய மாணவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக இன்று ஆராயப்படும் எனவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு எதிராக பாரிய எதிர்ப்புப் போராட்டம்

### திட்டமிடுகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நோர்வே செயற்படுவதால் சமாதான முயற்சிகளுக்கு எதிராக பாரிய எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக ஜாதிக ஹெல உறுமய எச்சரித்துள்ளது.

புதிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற சமாதானச் செயறபாட்டை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் இச்சமாதான நடவடிக்கைகள் தனித் தமிழீழத்திற்கு வழிவகுக்குமென்றே நாம் நம்புகிறோம். புதிய அரசாங்கம் தமக்கு மக்கள் அளித்துள்ள ஆணைக்கு ஏற்ப நடந்துகொள்ளாமல் அவர்களுக்குத் துரோகமிழைத்து வருகிறது. இதற்கு உறுதியான எதிர்ப்பை நாம் தெரிவிப்போம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சோல்ஹெய்ம் இன்று கிளிநொச்சிக்கு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் இன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்திப்பு நடைபெறும்.

இன்றைய சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிக்ளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான முன்னெடுப்புக்களின் முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்சோல்-ஜனாதிபதி நேற்று முக்கிய சந்திப்பு

### சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உடன்பாடு

(நமது நிருபர்)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் உள்ள முட்டுக்கட்டைகளை நீக்கும் பொருட்டு இராஜதந்திர ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நேற்றிரவு கண்டியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பின் போது அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை எங்கே? எப்போது ஆரம்பிப்பது என்ற விடயங்கள் தொடர்பாக இருவரும் ஆழமாகக் கலந்துரையாடியுள்ளனர்.

அடுத்த மாதம் 1ஆம் திகதி புறுசெல்ஸ்ஸில் சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் மீளாய்வுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட நிதி உதவிகளை இலங்கைக்கு வழங்குவதா? அல்லது வழங்காது விடுவதா? என்பதில் முடிவெடுக்கப்படவிருப்பதால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எப்படியாவது முன்னெடுப்பதற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மாவின் விலை உயரும்?

(கொழும்பு)

கோதுமை மாவின் விலையை ஒரு கிலோவிற்கு 4 ரூபா 40 சதத்தால் அதிகரிக்கவிருப்பதாக பிறிமா நிறுவனம் அறிவித்துள்ளது.

அரசாங்கம் தமக்கு உடனடியாக 482 மில்லியன் ரூபாக்களை வழங்காவிடில் மேற்படி நடவடிக்கையை எதிர்வரும் வெள்ளிமுதல் அமுல்படுத்த வேண்டியிருக்கும் என அந்நிறுவனம் திறைசேரிக்கு அறிவித்துள்ளது.

இவ்விவகாரத்தைக் கையாளுவதற்கு அரசாங்கம் இரு சிங்கப்பூர் வாசிகளைத் தமது பிரதிநிதிகளாக நியமித்துள்ளது. ஆனால் அரசாங்கம் தமது கோரிக்கைக்கான பதிலை பல மாதங்களாகவே

(12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வவு. அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பாதிப்புற்ற மக்களை சென்றடையவில்லை

## அரச அதிபர் கணேஸ் சுட்டிக்காட்டு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவருத்தி வேலை திட்டங்கள் பாதிக்கப்பட்ட மக்களை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத் தப்படவில்லை என வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா கமநல சேவை நிலைய மண்டபத் தில் இடம் பெற்ற கூட்டத்தில் உரை யாறறிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் வவுனியாவில் பல்வேறு அபிவிருத்து வேலைத்திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்பட்டன. ஆனால் இவையா வும் உரியஇலக்கை அடையாததால் மக்கள அவற்றின் நன்மைகளைப் பெறமுடியாது போய்விட்டது.

இவவாறு உரிய முறையில் அபி விருதத்தித் திட்டங்கள் நடை முறைப் படுத்தப்படாமைக்கு திணைக் களத் தலைவர்களே பொறுப்பேற்க வேண டும் என அரச அதிபர் மேலுமு சுட் டிக்காட்டினார்.

இககூட்டத்தில் திணைக்களத் தலை வாகள், உலக உணவுத் திட்ட அதி காரிகள் மற்றும் தொண்டர் நிறு வனங்களின் பிரதிநிதிகள் ஆகி யோர் கலந்துகொண்டமை குறிப் பிடத்தக்கது. (உ-4,61)

# எழுதுமட்டுவாள் பாடசாலையை மீள இயக்க நடவடிக்கை

(பலாலி)

55வது சேனையகத்தின ஆலோசனைககமைய 516வது படைய ணியின் மேற்பார்வையில் அதிகாரி களும், சிப்பாய்களும் இணைந்து கடநத சனியன்று எழுதுமட்டுவாள் அரசியனர் தமிழ் கலவன் பாடசா லையில் சிரமதான பணிகளை மேற கொண்டார்கள்.


இந்த சிரமதானட் பணிகளை பாட சாலை அதிபர் மற்றும் மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் ஊர் மக்கள் என சுமார் 75 பேர் வரை ஒன்றிணைந்து செய்தனர். இப் பாடசாலையை மீள ஆரம்பிப் பதற்கு வசதியாக இராணுவத்தி னர் முன்வந்து இந்த சிரமதா னப் பணிகளை மேற்கொண்ட மைக்கு ஆசிரியர்களும் பெற்றோர் களும் நன்றி தெரிவித்துள்ளனர்.

மேற்படி பாடசாலையில் சேத டைந்துள்ள கட்டடங்களை புனர மைப்பதற்கு தேவையான நிதியைப் பெற்று வழங்க யு.என்.எச்.ஆர் நிறுவனம் முன்வந்துள்ளது. இந்த நிகழ்வின் போது இந்த நிறு வனத் தின் நான்கு பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையை மீள ஆரம் பிப்பதற்கு இராணுவத்தினர் மேற் கொள்ளும் முயற்சிகள் குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாகவும் அதே வேளை, இராணுவத்தினரின் முயற் சியால் மிக விரைவில் இப்பாட சாலையை திருத்தியமைத்து மீண்டும் ஆரம்பிக்கமுடியும் என்றும் அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் நம் பிக்கை தெரிவித்தனர்.












# ம.ம. முன்னணி தனித்து போட்டியிடும் மர்மம் என்ன?

## சந்திரசேகரன் தருகிறார் விளக்கம்

(ஹற்றன்)

மலையக மக்கள் வாழும் பிர தேசங்களில் தமது பலத்தை தக்க வைத்துக் கொள்வதற்காகவே மாகாண சபைத் தேர்தலில் தனித் துப் போட்டியிடத் தீர்மானித் திருப் பதாக மலையக மக்கள் முன்னணி யின் தலைவரும் நாடளுமன்ற உறுப் பினருமான பொ. சந்திரசேகரன் தெரி வித்துள்ளார்.



எதிாவரும் மாகாண சபைத் தேர் தலில் போட்டியிடும் மலையக மக் கள் முன்னணியின் உறுப்பினர்க ளுடனான சந்திப்பு ஒன்று ஹற்ற னில் நடைபெற்றது.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே சந்திர சேகரன் இதனைத் தெரிவித்தார்.

தேர்தலில் வெற்றி பெற வேண டும் என்ற நோக்கத்திற்காக மட் டும் இவ்வாறு நாம் தனித்துப் போட்டி யிடவில்லை.


மலையக மக்கள் பிரச்சினை களுக்கு தீர்வுகாணவும் குரல் கொடுக் கவும் எமக்கு ஆசியல் பலம் தேவை. இதற்காகவே நாம் பாடு பட்டு வரு கிறோம்.

இன்று நம் நாட்டில் மலையக மக்களின் பாதுகாப்பு கேள்விக்கிட கமாகியுள்ளதனால் மக்களின் பாது காப்பை உறுதி செய்யக் கூடிய பல மான சக்தி ஒன்று தேவை எனவே இததகைய பலமான சகதியை உரு வாக்கும் முயற்சியிலேயே நாம் ஈடு படடு வருகிறோம் என்றார். (உ-4,61)

# பேர்ளின் சென்ற புலித்தேவன் இன்று புனர்வாழ்வு பற்றி பேச்சுவார்த்தை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித் தேவ



னுக்கும் ஜேர்மன் வெளிநாட் டமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருததி அமைப்புக்கும் இடையில கலநது ரையாடல் ஒன்று ஜேர்மன் பேர்லின் நகரத்தில் இன்று இடம் பெறவுள் ளது.

வடக்கு -கிழக்கு புனர்வாழ்வு புனர மைப்பிற்கு வெளிநாட்டு நிதி யுதவி களை பயன்படுத்துவது தொடர் பாகவும், சமாதான முன்னெடுப்பு தொடர்பானதாகவும் இந்த கலந்து ரையாடல் அமையவுள்ளது.

சோஹ்றோ என்ற அரச சார்பற்ற நிறு வனம் இந்த சந்திப்பை ஒழுங்கமைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# பா. உ.க்களுக்கு பயிற்சிப் பட்டறை

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் சகல புதிய உறுப்பினர்களுக்கும் இரண்டு நாள் வதிவிடப் பயிற்சிப் பட்டறை யொன்றை நடத்தவுள்ளதாக சபா நாயகர் டபிள்யூ ஜே. எம். லொக்கு பண்டார அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற சட்டதிட்டங்கள் நிலையியல் கட்டளைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்க மளிப்பதற்காகவே இந்தப் பயிற் சிப பட்டறையை நடத்தத் தான் தீர் மானித்திருப்பதாக சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10,60)

# விடலைப் பருவத்தினர் புரியும் வீணான வம்புகள் குறித்து நீதிபதியிடம் புகார்

(வவுனியா)

வவுனியாவில் மீண்டும் காடைத் தனமும் வீதிச் சண்டைகளும் ஆரம பித்து இருப்பது குறித்து வவு னியா நீதி மன்றத்தின் கவனத் திற்கு கொண்டு வரப்பட்டு இருப்பதாக தெரிவிககப்படுகின்றது.

வவுனியாவின் குருமன்காடு, பூந் தோட்டம், நம்பைக்குளம், சிறுவர் பூங்கா போன்ற பகுதிக்ளில் கூடும் இளைஞர் குழுக்கள் போய் வரும் பெண்கள், மாணவிகளின் மீது அவ தூறான சொர் பிரயோகங்களை மேற் கொள்வதாகவும், இதன் காரண மாக பெண்களும் மாணவிகளும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம கொடுப்பதாக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் மக்கள் நேரடியாக முறையிட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக குற்றத்தடுப்பு பிாிவு பொறுப்பதிகாாி திலகரத் தினவை நடவடிக்கைகளை எடுக்கு மாறும் நீதிபதி உத்தரவு விட்டுள் ளார்.

மாணவாகள் பாடசாலைக்கு போகும் போதும், பின்னர் பாட சாலை விட்டு திரும்பும போதும் சேட் டைகள புரிவதாகவும் ,

அத்துடன் மாலை 4 மணிக்கும் 7.30 மணிக்கும் இடையிலேயே இளைஞர்கள் வீதிகளில் நின்று பெணகள் மீது சேட்டை புாிவதாக வும தெரிவிக்கப்படுகிறது.

கடநத ஓகஸ்ட் மாதம் முதல் மாச் மாதம் வரை இவ்வாறான செயல் கள் குறைந்து இருந்த போதிலும், தற்போது மீண்டும் தலை தூக்கி யுளளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த இருவாரங்களுக்குள் நான்கு தெருச் சண்டைகளும் கத்தி வெட் டுக்களும் இடம்பெற்றுள்ளன.

இது இவ்வாறு இருக்க, வவுனியா வைரவா புளியங்குளம் பகுதியில அமைந்துள்ள விளையாட்டுக் கழகம் ஒன்றின் உறுப்பினர்கள் மீது புகார் கிடைப்பதாகவும் இவர்கள் தொடர்பாக கண்காணிப்பு மேற் கொள்ளுமாறும் தேவையேற்படின் நீதிமன்றின் அனுமதியைப் பெற்று காரியாலயத்தை சோதனை இடவும், கைது செய்ய முடியும் என்றும் வவு னியா மாவட்ட நீதவான் எம். இளஞ் செழியன் பணித்துள்ளார்.

இவ்வாறு சேட்டை புரிபவர்கள் மீது வீதியில் அலைந்து திரிபவர் கள் அமைதிக்குப் பங்கம் விளைவிப பவர்கள் என்ற சட்டத்தின் கீழ் நட வடிக்கை எடுக்கப்படுபடவுள்ளது.

இந்த சம்பவத்தில் ஈடுபடுபவர்கள் 18 தொடக்கம் 20 வயதுக்கு இடைப் பட்டவர்களாக இருப்பாகவும் தெரி விக்கபபடுகிது. இந்த சம்பவத் துடன் தொடர்புடைய சிலரை வவுனியா பொலிஸார் கைது செய்து முள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# கார்க் கடத்தல் முறியடிப்பு மூவர் பொலிஸாரால் கைது

(வவுனியா)

வவுனியா ஓமந்தை ஊடாக கடத்தப்படவிருந்த புத்தம் புதிய கார் ஒன்றினை நேற்று மாலை மீட்டுள்ளதாக வவுனியா பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இச சம்பவத்துடன் தொடர்பு டைய மூன்று இளைஞர்களையும் கைது செய்திருப்பதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். இந்த இளை ஞர்களிடம் தொடர்ந்து விசாரணை கள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

வாகனத்தில் வந்த நபர்களிடம் கேள்வி கேட்டபோது அவர்கள் உரிய பதில் அளிக்காது நின்றதன் காரணமாக விசாரணை மேற் கொண்ட போது, வாகனம் கடத்தப் படுவதை அறிந்து அவர்களை தாம் கைது செய் ததாக பொலிஸார் தெரிவிததுள்ளனர்.

இவர்களுக்கு வாகனம் கடத்து வதறகு யாரோ பணம் கொடுக்க முறபட்டு இருப்பது கண்டறியப்பட் டுள்ளது. (உ)

# அசுத்தமான உணவை உட்கொள்வதால்
# ஆண்டுதோறும் 7 இலட்சம் பேர் மரணம்
## ஆசியாவில் இப்படியும் ஒரு துன்பியல்

(மலேசியா)

அசுத்தமான உணவு, நீரை உட்கொள்வதால் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஆண்டுதோறும் 7 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் இறக்கின்றனர்.

மலேசியாவின் செரெம்பான் நகரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய ஐ.நா, உணவு மற்றும் விவசாய அமைப்புத் துணைத் தலைவர் ஹார்ட்விக் டி ஹான் இத் தகவலைத் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் 40 நாடுகளிலிருந்து உணவுப் பாதுகாப்பு கொள்கை உருவாக்குபவர்கள் மற்றும் சிறப்பு நிபுணர்கள் பங்கேற்றனர்.

உணவு மற்றும் நீரால் ஏற்படும் நோய்களால், ஒரு நபருக்கு ஆண்டொன்றுக்கு சராசரியாக 5 ஆயிரம் ரூபா செலவாகிறது. வளரும் நாடுகளில் இது மேலும் அதிகமாக இருக்கும்.

உணவினால் ஏற்படும் நோய்களால் உற்பத்தித்திறன் குறையும். ஆசியாவில் பரவிய ஃப்ளூ காய்ச்சல் மற்றும் சார்ஸ் நோய்கள் உணவினால் ஏற்படுபவை அல்ல என்றாலும், உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்ட விதங்கள், விலங்குகள் நடத்தப்பட்டவிதம் ஆகிவற்றுடன் தொடர்புடையதாக இருக்கின்றன.

உணவு சார்ந்த நோய்கள் ஏறபடுவது ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் அதிகமாக இருக்கிறது. விலங்குகளை மனிதர்கள் வளர்ப்பதும் உணவுப் பொருட்களைத் தயாரித்து விநியோகிக்கும் முறையும் இதற்குக் காரணம் எனவும் அவரால் கருத்தரங்கில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## கனடாவில் ஜ"லை தேர்தல்

(ஒட்டாவா)

கனடாவில் ஜ"ன் 28இல் பொதுத் தேர்தல் நடத்த அந் நாட்டுப் பிரதமர் பால் மார்டின் முடிவு செய்துள்ளார். அரசின் மீது கூறப்படும் ஊழல் குற்றச் சாட்டுக்களைத் தேர்தல் வெற்றியின் மூலம் இல்லாமல் செய்துவிடலாம் என்ற நம்பிக்கையில், தேர்தலை சந்திக்க பால் மார்டின் முடிவு செய்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். தனது லிபரல் கட்சி 4வது முறையாக மீண்டும் வெற்றி பெறும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

(உ)

## ஈராக் போரில் இற்றைவரை
## 796 அமெரிக்க வீரர்கள் பலி

(பக்தாத்)

ஈராக்கின் பலுஜா நகரத்தில் அமெரிக்க படைவீரர் ஒருவர் அண்மையில் நடைபெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்க இராணுவ அதிகாரி,

சாலையில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் வைக்கப்பட்ட வெடிகுண்டை அமெரிக்க எதிர்ப்புத் தீவிரவாதிகள் வெடிக்கச் செய்தனர். இதில் அவ்வழியே சென்று கொண்டிருந்த அமெரிக்க வீரர் ஒருவரும் தீவிரவாதிகளில் ஒருவரும் அமெரிக்கக் கப்பலில் வேலை பார்க்கும் ஒருவரும் இறந்தனர்.

அமெரிக்க வீரர்கள் பலருக்குக் காயம் ஏற்பட்டது. கட்டட ஒப்பந்தக்காரர் ஒருவரும் இறந்தார். பக்தாத்தில் சாலையோரத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள் வெடித்ததிலும் பீரங்கித் தாக்குதலிலும் 4 அமெரிக்க இராணுவ வீரர்கள் காயமடைந்தனர். மற்றொரு வீரருக்கு துப்பாக்கிச் சண்டையில் காயம் ஏற்பட்டது.

ஈராக்கின் மீது அமெரிக்கா படையெடுத்துச் சென்றது முதல் இதுவரை 796 இராணுவ வீரர்கள் இறந்துள்ளனர். ஈராக்கிய படைகளுடன் நடைபெற்ற போரில் மட்டும் 580 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றார்.

(உ)



ஜப்பானின் 50வது திரைப்பட விழாவிற்கு வந்த ஹாங்காங் திரைப்பட நட்சத்திரம் ஜாக்கி சான், சிட்னி ஒலிம்பிக் போட்டியில் ஜுடோ சாம்பியனான ர்யோகோ டானியுடன் செய்தியாளர்களைச் சந்தித்தபோது.

WORLD NEWS உலக தரிசனம்

## ஆலயத்தில் அதிசயம்!
## கன்னிமரியாள் ஆலயத்தில் கண்ணீர் வடிக்கும் சிலைகள்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்ரன் நகருக்கு அருகே உள்ள அன்னை மரியாள் தேவாலயத்தில் உள்ள பல சிலைகள் கண்ணீர் வடிக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யேசுநாதரின் சிலைகள் மாத்திரமன்றி அன்னை மரியாள் உருவச் சிலைகளும் கண்ணீர் வடிப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த அதிசயத்தைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் தேவாலயத்திற்கு படையெடுத்து வருவதாகவும், கிறிஸ்தவ மத குருமார் இவ்வாறு சிலைகள் கண்ணீர் வடிப்பதற்கு என்ன காரணம் என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றார்கள் எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(உ-60,10)



கடந்த வெள்ளிக்கிழமை பிரசவத்திற்காக வந்த பெண்ணிற்கு சென்னை அயனாவரம் இஎஸ்ஐ மருத்துவமனையில் இரட்டைத் தலையுள்ள பெண் குழந்தை ஒன்று பிறந்தது. இரண்டு தலைகள், இரண்டு தண்டுவடம் ஆனால் மற்ற உறுப்புகள் எல்லாம் ஒன்றுதான். அறுவை சிகிச்சை மூலம் ஒரு தலையை மட்டும் அகற்றிவிட்டு குழந்தையைப் பிழைக்க வைக்க முடியுமா என்று மருத்துவர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

## கடலில் மூழ்கிய கப்பலில் இருந்து எண்ணெய் கசியலாம் என அச்சம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் அருகே எண்ணெய் கப்பல் மீது மோதியதில் சேதமுற்று கடலில் முழ்கிய கப்பலில் இருந்த எரிபொருள் கசிந்து கடலில் கலக்கிறதா என்பதை ஆராயும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

4ஆயிரம் கார்கள் ஏற்றப்பட்ட இந்த ஹ"ண்டாய் கப்பலில் அதன் பயணத்துக்காக 990 தொன் எரிபொருள் இருந்தது. இந்த நிலையில் சிங்கப்பூரின தெற்கே 8கி.மி தொலைவில் இந்தக் கப்பலும், 2 இலட்சத்து 80 ஆயிரம் தொன் எண்ணெயுடன் வந்த பனாமா நாட்டுக் கப்பலான காமினேசனும் மோதின.

அப்போது சேதமுற்ற ஹ"ண்டாய் கப்பல், அதில் ஏற்றப்பட்ட4 ஆயிரம் கார்களுடன் கடலில் மூழ்கியது. பலத்த சேதம் அடைந்து 40 மீற்றர் ஆழ் கடற் பகுதியில் அது மூழ்கிக் கிடக்கிறது.

அக் கப்பலில் பெரிய அளவுக்கு ஓட்டை ஏற்பட்டுள்ளதனால் அதிலிருந்து எண்ணெய்க் கசிவு இருக்கும் என்று கப்பலை இயக்கும் நிறுவனத்தின் அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

மீட்புப் படையினர் கடலுக்கு அடியே சென்று எண்ணெய்க் கசிவு உள்ளதா என்பதையும் ஆராய்கின்றனர்.

எண்ணெய்ச் சரக்குக் கப்பலான காமினேசன் சிங்கப்பூர் கடற்கரைக்கு இழுத்து வரப்பட்டுள்ளது.

(உ)

## சார்ஸ் தடுப்பூசிச் சோதனையை
## சீன விஞ்ஞானிகள் ஆரம்பித்தனர்

(பீக்கிங்)

சார்ஸ் எனப்படும் தீவிர மூச்சுத்திணறல் தொற்று நோய் தடுப்பூசியை சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

சோதனைச்சாலையில் அதன் பரிசோதனை முடிவடைந்ததை அடுத்து, மனிதர்களுக்கு அத் தடுப்பூசியைச் செலுத்தும் பரிசோதனையை சீன விஞ்ஞானிகள் தொடங்கியுள்ளனர்.

மனிதர்களுக்கு இச் சோதனை நடத்தப்படுவது உலகிலேயே இதுதான் முதல் முறை. இதற்காக 36 இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களை விஞ்ஞானிகள் தேர்வு செய்துள்ளனர்.

இவர்களில் 3இளைஞர்களுக்கும் ஓர் இளம் பெண்ணுக்கும் அண்மையில் அத் தடுப்பூசி மருந்தைச் செலுத்தி அவர்களின் உடல் நிலையை விஞ்ஞானிகள் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்.

கடந்த இரு நாட்களில் அத் தடுப்பூசி மருந்தால் அவர்களது உடலில் எந்தவித எதிர்விளைவும் ஏற்படவில்லை என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். அவர்களைத் தொடர்ந்து 210 நாட்களுக்கு விஞ்ஞானிகள் உன்னிப்பாகக் கண்காணிப்பார்கள்.

சீனத் தலைநகர் பீக்கிங்கில் உள்ள கெக்ஸிங் பயோ-புராக்ட் நிறுவனம் அந்தத் தடுப்பூசியை உருவாக்கியுள்ளது. மனிதர்களுக்கு அதைச் செலுத்தி சோதனை நடந்தும் பணியை சீன-ஜப்பானிய நட்புறவு மருத்துவமனை மேற்கொண்டுள்ளது.

(உ)

## 10 இலட்சம் மதிப்புள்ள பரிசுப் பொருட்களைப் பெற்றுள்ளார் புஷ்

(நியூயோர்க்)

பல்வேறு நிகழ்ச்சிகளில் 17 பரிசுப் பொருட்கள் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார். அவற்றின் மொத்த மதிப்பு 10 இலட்சத்து 6 ஆயிரம் ரூபா ஆகும்.

யாரிடமிருந்தாவது ரு.12 ஆயிரத்துக்கு (260 டொலர்கள்) மேல் மதிப்புடைய பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டால், அமெரிக்க அதிபருக்கான நடத்தை விதிகளின்படி அவற்றை அறிவிக்க வேண்டியது அவசியமாகும்.

அதன்படி தான் பெற்றுக் கொண்ட பரிசுப் பொருட்களின் விபரங்களைத் தெரிவித்துள்ளார்.

புஷ்ஷிற்குச் சொந்தமான கிராஃபோர்டு பண்ணை வீட்டில் படகு விடக்கூடிய குளம் உள்ளது.



அங்கு படகுத் துறை அமைத்த வகையில் ஒருவர் 3 இலட்சத்து 37 ஆயிரத்து 500 ரூபா வழங்கியிருக்கிறார்.

கோல்ஃப் விளையாட்டுச் சாதனங்கள், சட்டையில் பயன்படுத்தப்படும் கப்-லிங்குகள் போன்றவையும் அவருக்குப் பரிசாக அளிக்கப்பட்டுள்ளன. 81 ஆயிரம் ரூபா மதிப்புள்ள புதிர் விளையாட்டுச் சாதனமும் அப் பரிசுகளில் அடங்கும். அண்மையில் அவர் வெளியிட்டுள்ள தம் சொத்து விபர அறிக்கையில் இத்தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

(உ)




ஈக்குவடோரில் ஜுன் 1ஆம் திகதி நடைபெறவுள்ள உலக அழகிப் போட்டியில் பங்கேற்பதற்காக வந்துள்ள இத்தாலி, பிரான்ஸ், நிகராகுவே, செர்பியா நாட்டு அழகிகள்.

## சிறுவிளம்பரம்

### வரலாற்று ஆவணங்கள்

கலாநிதி க.குணராசா-ஈழத்தவர் வரலாறு, **The Jaffna Dynasty**? மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம், முத்துத் தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம், ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம், மயில்வாகனப்புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை, 24 மணி நேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது. யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு-பிரபல புத்தக சாலைகளில் விற்பனையாகின்றன. கமலம் பதிப்பகம், 75/10A, பிறவுன் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (8530)

### விற்பனைக்குண்டு

8ஸ்ரீ 5497 இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள **PEUGEOT** விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.
**T.P.**226-3465
(8528)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவின் பின்னணியில் பேரினவாதக்கட்சி

## கண்டிக்கிறார் மருதூர்க்கனி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடசியில் பிளவுகள் ஏற்பட்டமைக்குப் பேரினவாதக்கட்சி ஒன்று பின்னணியில் இருக்கின்றதென்றே தான் கருதுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மூத்த துணைத் தலைவருமான கவிஞர் புலவர் நாயகம் மருதூர்கனி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டுவரும் விடியும்வேளை நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

முஸ்லிம் மக்களின் உரிமைக்காகக் குரல்கொடுத்துவந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடசியில் புதிதாக இணைந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அந்தககட்சிமீது கல்லை எறிந்துவிட்டு ஆளுங்கட்சிக்குத் தாவிவிடுகின்றாகள்.

இதனை நினைக்கும் போது மிகவும் வேதனையாக இருக்கின்றது.

குறிப்பாக ரிசாத் பதியுதீன், நஜிப் அப்துல் மஜித் ஆகிய இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து திடீரென ஆளும் கட்சிக்குத் தாவிவிட்டார்கள்.

இவர்கள் முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடாகவே அரசியலில் பிரவேசித்தார்கள்.

எனவே இவர்கள் அரசுடன் இணைந்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் மீண்டும் ஒட்டிக்கொள்வதற்காக அந்தக் கட்சியின் உதவியுடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மீது அவதூறுகளையும், வீண் பழிகளையும் சுமத்திவிட்டு கட்சியில் இருந்து விலகியிருக்கலாம் என்றே நான் நம்புகின்றேன்.

இத்தகைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கதிரைகளுக்கு ஆசைப்பட்டுக் காங்கிரஸ் கட்சியில் இணைந்தவர்களே தவிர முஸ்லிம் மக்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வரவில்லை என்றே நான் கருதுகின்றேன்.

எல்லா மனிதனும் தவறு விடுவது வழக்கம். அது சிலரிக் பல வீனம் என்று கூடச் சொல்லலாம்.

ஆனால், அதனைப் போய் தூக்கிப்பிடித்துக்கொண்டு முஸ்லிம் சமுதாயத்திற்கே ஓர் அவமானத்தை உருவாக்க முனைவது நல்லதல்ல.

தவறுகளைச் சுட்டிக்காட்டலாம். அதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கின்றது. ஆனால், அந்தத் தவறைத் தற்போது தூக்கிப்பிடித்துப் பெரிதாகக் காட்டுவது நல்லதல்ல.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவருக்கு இத்தகைய அவமானம் ஏற்பட்டதற்கு அவரே காரணம் என்றுதான் நான் சொல்லுவேன்.

அரசியலைப் பொறுத்தவரையில் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவது இலலாததை உருவாக்கி வீணான குற்றங்களைச் சுமத்துவது வழமை.

இதனைக் ஹக்கீம் நன்கு அறிந்துள்ளார். அவ்வாறு அறிந்துகொண்டும் கூட நாலு பக்கங்களாலும் அவர் எதிர்ப்பைச் சம்பாதித்து வந்தார்.

இதனால் அவருக்கு எதிரிகள் ஏராளமாக இருந்தனர்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக்கூட ஹக்கீம் பல தடவைகள் தாக்கிப் பேசிவந்திருக்கின்றார்.

இவரது இந்தச் செயல் முட்டையைக் கொண்டுபோய் கல்லில் எறிவது போல எனக் கூறுவதுதான் பொருத்தமானது.

இதற்கிடையில் ஹக்கீம் அரச கட்சியுடன் இணைந்திருந்தால் அவருக்கு இத்தகைய அவமானம் ஏற்பட்டிருக்காது. அவை எல்லாம் பூசி மெழுகப்பட்டிருக்கும். இது தான் அரசியல் வரலாறு.

எது எவ்வாறாயினும் என்னைப் பொறுததவரையில் ஹக்கீம் பொல்லைக்கொடுத்து அடிவாங்கிவிட்டார் என்றே கூறுவேன் என்றார். (உ-60,10)

## பெண்களின் உடல்நலம் குறித்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பெண்களின் உடல் நலம் சமபந்தமான- கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை மு.ப.10.30 மணிக்கு யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் 'பெண்களுடைய உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், தீர்வுக்கான வழிகள்' என்ற தலைப்பில் யாழ்போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணா டாக்டர் ஜி.பவானி கருத்துரை வழங்கவுள்ளார். (உ)

# ஆங்கில மொழிப் போதனையை விருத்தி செய்வதற்கு அங்கீகாரம்

(கொழும்பு)

பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கில மொழிப் போதனை மற்றும் கற்கையை விருத்தி செய்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான கல்வியமைச்சின் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆரம்ப வகுப்புகளில் இருந்து ஆங்கில மொழிப் பேச்சாற்றலை வளர்ப்பதற்கான கற்பித்தல் நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளித்தல் மற்றும் 2000ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கட்புல, செவிப்புல மற்றும் உபகரணங்களைப் பிரயோகித்துப் போதித்தலை ஊக்குவித்தல் ஆகியவற்றை இந்தத் திட்டம் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஆங்கில பாடத்தை தரம்-6முதல் தரம்-8வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத் தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக் கும் விசேட பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் ஆங்கிலமொழி மூல நூல்கள் சிறந்த தரத்தில் இருப்பதையும் குறித்த திகதிகளுக்கு முன்னதாகப் பாடசாலைப்பிள்ளைகளுக்கு அவை கிடைக்கபெறுவதை உறுதிப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

மேலும் பட்டதாரி மாணவர்களுக்கு தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடலுககான பயிற்சியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (உ-60-10)

## வேலையற்ற பட்டதாரிகள் நிலைகுறித்து பலரும் கவலை

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க முயறசி எடுத்த அரசு தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கத் தவறிவிட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

வேலையற்ற பட்டதாரிகள் ஏதாவது ஒரு தொழில் கிடைத்தால் போதும் என்ற மனோநிலையில் பலதரப்பட்ட தொழில் துறைகளில் இணைந்துளளன்ர.

எனினும், தகுதிக்குரிய தொழில் தமக்குக் கிடைக்காதமை துரதிஷ்வசமானது என அவர்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

பட்டதாரிகள் குறைந்த தரத்திலான தொழில் துறைகளையே புரிந்து வருகின்றமையால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றமையைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-4,61)

# கடன் தொகையை அதிகரிக்குமாறு இந்தியாவைக் கோருகிறது இலங்கை

(கொழும்பு)

இந்தியா வழங்கும் கடனின உச்ச வரம்பை 450 கோடியாக உயர்த்த வேண்டும் என்று இலங்கை அரசு கேட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.

இலங்கையில் ஜூலையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற இருப்பதால் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலையை உயர்த்த அரசு விரும்பவில்லை.

பெற்றோல், டீசல், சமையல் வாயு ஆகியவற்றுக்கு மானியம் வழங்க ரூ.30கோடி தேவைப்படும் நிலையில் இந்தியா வழங்கும் கடன் தொகையின் உச்சவரம்பை உயாத்த வேண்டும் என்று இலங்கை கோரியுள்ளதை இந்திய அதிகாரிகளும் உறுதிசெய்துள்ளனா். (உ)

## கற்பிட்டியில் குழப்பம் விளைவித்த 4 பொலிஸார் இடைநிறுத்தம்

கற்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 4 பொலிஸ் அதிகாரிகள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் புத்தளம் பகுதியில் வைத்து சிவில் உடையில் வந்த மேற்படி 4 பொலிஸ் அதிகாரிகளும் இரு சட்டத்தொழிலாளர்கள் தாக்கப்பட்டதால் அப்பகுதி எங்கும் பெரும் பதற்றம் நிலவியது.

மேற்படி குழப்பம் ஏற்படுவதற்குக காரணமானவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந் நான்கு அதிகாரிகளும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இச் சம்பவங்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகள் இடம் பெற்று வருவதாக சிலாபம் பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி யூ.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் குழப்பத்தில் மூழ்கியிருந்த கற்பிட்டிப் பகுதியில் தற்பொழுது அமைதி நிலவுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (உ-4,61)

# தமிழ்த்தினப் போட்டிகளை நெறி பிறழாது நடத்துக!

## தமிழ் மொழிப்பிரிவுக் கல்வி அமைச்சு அறிவுறுத்து

அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் வழமைபோல் பாடசாலை, கோட்டம், வலயம், மகாணம் ஆகிய மட்டங்களிலும் நிறைவாகத் தேசிய மட்டத்திலும் நடைபெறவிருக்கின்றன. சகல தமிழ் மொழி மூலப் பாடசாலைகளிலும் தமிழ் மொழித்தினப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகள் யாவும் பாடசாலை மட்டத்தில் எதிர்வரும் ஜூன்மாதம் 15ஆம் திகதிக்கு முன்பும், வலய மட்டத்தில் 30ஆம் திகதிக்கு முன்பும் மாகாண மட்டத்தில் எதிர்வரும் ஜூலை மாதம் 19ஆம் திகதிக்கு முன்பும் நடாத்தி முடிக்கப்படல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய நிலைப் போட்டிக்கான விண்ணப்பங்கள் யாவும் ஜூலை மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கததக்கதாக சம்பந்தப்பட்ட மாகாண கல்விப் பணிப்பாளர்களினால் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மாகாணமட்ட,தேசிய மட்டப் போட்டிகளில் 1,2ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு உயர்கல்விக்கான சந்தர்ப்பங்களில் சலுகைகளைப்பெற வாய்ப்புண்டு.

போட்டிகள் யாவும் சுற்றுநிருபம் 2004/13க்கு அமைவாக நெறிபிறழாது நடைபெற வேண்டுமெனத் தமிழ் மொழிப்பிரிவு கல்வி அமைச்சு மேலதிக செயலாளர் சகல மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்களை சுற்றுநிருபம் மூலம் கேட்டுள்ளார். (உ-117)

## யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் புகையிரத நிலையம் முன் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்கள் நேற்று வவுனியா புகையிரத நிலையத்திற்கு முன்னால் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

5ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா வளாகத்தில் போதிய வசதிகள் இல்லையென்றும் இதுகுறித்து நிர்வாகத்திற்குப் பலதடவை அறிவித்த போதும் நிர்வாகம் அது குறித்து அக்கறை காட்டவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனாலேயே தாம் ஆர்ப்பாட்டத்தில் குதித்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் வவுனியா வளாகத்தின் முதல்வர் பேராசிரியர் திருமதி ராஜேஸ்வரி மகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப் போவதாக ராஜேஸ்வரி மகேஸ்வரன் மாணவர்களிடம் உறுதியளித்தார். (உ-60,10)

# இளையோரின் எதிர்காலம் வளம் பெறுவதற்கு

## அன்பும் அரவணைப்புமே சிறந்த அடித்தளம்

எல்லா தாய் தந்தையர்களும் நிபந்தனையின்றி தங்களது பிள்ளைகள் நல்லது செய்தாலும் கெட்டது செய்



தாலும் எச் சமயத்திலும் அவர்களை நேசிக்கிறார்களா? அல்லது அவர்கள் தங்களது பிள்ளைகள் நல்லவர்களாய் இருந்தால் மட்டுமே நேசிப்பதும் கெட்டவர்களாயிருந்தால் வெறுப்பதுமாக இருக்கின்றார்களா?

மத சம்பந்தமான ஆராய்ச்சியி லீடுபட்டிருக்கும் ஒரு சர்வ கலாசாலையானது இக் காரியத்தைக் குறித்து ஆராய்ச்சி ஒன்றை நடத்தியது. மாணவர்கள் தாங்கள் படிக்கின்ற பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஏன் என்பது ஆராயப்பட்டது. தங்களது பள்ளிகளையும் கல்லூரிகளையும் நேசித்து தங்களது முழு ஒத்துழைப்பையும் கொடுத்து வந்த மாணவர்களிடத்திலும், ஆசிரியர்களுக்கும், நிர்வாகங்களுக்கும் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த மாணவர்களிடத்திலும், தனித்தனியாக ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. அந்த ஆராய்ச்சியின் பலனாகக் கண்டறிந்த உண்மைகள் என்ன தெரியுமா? நிபந்தனையின்றி எச்சமயத்திலும் பாசத்தோடு வளர்க்கப்பட்ட பிள்ளைகள் தாங்கள் படித்து வந்த நிறுவனங்களை நேசித்து தங்களது முழு ஒத்துழைப்பையும் அளித்தார்கள். அதிகாரங்களை மதித்து - கீழ்ப் படிந்து காரியங்களை சீரான முறையில் செய்தார்கள். ஆனால் நல்லது செய்தால் மாத்திரமே நேசிக்கப்பட்டு தவறும்போது பெற்றோரால் வெறுக்கப்பட்ட சிறுவர் - சிறுமியர் தாங்கள் படித்து வந்த பள்ளிகளை வெறுத்தார்கள். அதிகாரங் களுக்குக் கீழ்ப்படிய மறுத்தார்கள். புரட்சிகளில் ஈடுபட்டார்கள்.

நல்லது செய்தால் மட்டுமே பெற்றோரால் நேசிக்கப்பட்ட பிள்ளைகள் தங்கள் பெற்றோரை எப்படியாவது தங்களை நேசிக்கச் செய்ய வேண்டுமென்ற முயற்சியில் ஏதேதோ செய்கின்றார்கள். எனினும் அச் சமயத்தில் தங்களது ஆரோக்கியமற்ற உணர்வுகளை மனதில் ஏராளமாகக் குவித்துவைக்கின்றார்கள். இவ்வாறு நாட்பட குவித்து வைக்கப்பட்ட உணர்வுகள் பின்னர் அதிகாரங்களுக்கு எதிராகத் திரும்புகின்றன. எனவே, இத்தகைய ஒரு சில மாணவர்கள் சேர்ந்து பாடசாலைக்கு எதிராக பயங்கரமான போராட்டங்களில் ஈடுபடுகின்றார்கள்.

### பிள்ளைகளை நேசியுங்கள்

சிறு வயதில் பிள்ளைகளுக்கு அவ்வப்போது மனதில் போராட்டங்கள் ஏற்படுகின்றன. வீட்டிலும் வெளியிலும் பிரச்சினைகளைச் சந்திக்கின்றார்கள். சில சமயங்களில் பெற்றோரின் பெயரைக் கெடுக்கும் வண்ணம் பல கேவலமான நடவடிக்கைகளில் கூட பிள்ளைகள் இறங்கி விடுவதுண்டு. பெற்றோர் எச்சமயத்திலும் என்ன ஆனாலும் பிள்ளைகளை மனமார நேசிப்பவர்களாக இருப்பார்களானால், பிள்ளைகளை நெருக்கமாக அணைத்துப் பழகுவார்களானால், பிள்ளைகள் தங்களது மனதின் போராட்டங்களையும் பிரச்சினைகளையும் பெற்றோரோடு பகிர்ந்து கொள்வார்கள். பெற்றோரின் அன்பு தங்கள் சார்பில் இருக்கிறது என்றறிந்து வேறுபாடான கருத்துக்களை மனதில் புதைத்து வைக்காமல் வெளியேற்றி விடுகிறார்கள். ஆனால் நிபந்தனையோடு நேசிக்கும் பெற்றோர்களது பிள்ளைகள், பெற்றோர்கள் தங்களை நேசிக்க மாட்டார்களே என்று அறிந்து, எப்பொழுதும் தங்களது நல்ல பழக்கத்தையே பெற்றோருக்குக் காட்ட விரும்பி, ஆரோக்கியமற்ற உணர்வுகளை மனதிலே தேக்கிவைத்து, குமைந்து குமைந்து இறுதியில் அவர்களுக்கும் அவர்கள் கல்வி கற்றுவரும் ஸ்தாபனத்திற்கும் கேடான காரியங்களையே செய்து விடுகின்றார்கள்.

பெற்றோரால் வெறுக்கப்பட்டு வீட்டைவிட்டுத் துரத்தப்படும் பிள்ளைகளைக் காண்கின்றோம். தகப்பனுக்குத் தெரியாமல் பின்வாசலுக்கு வந்து தாயிடம் உணவு பெற்றுச் செல்லும் பிள்ளைகளைக் காண்கிறோம். ஒரே விட்டிற்குள் ஒருவருக்கொருவர் பேச்சு வார்த்தை கூட இல்லாமல் பெற்றோரும் பிள்ளைகளும் நடமாடுவதைக் காண்கிறோம். "நீ ஒழிந்தால் தான் இந்த வீடு உருப்படும்" என்று ஆக்ரோஷமாகப் பேசும் அம்மாக்களையும் பார்க்கின்றோம். ஏன் இந்த அவல நிலை.

### பெற்றோரின் பொறுப்பின்மை

பொறுப்பற்ற பெற்றோர்களே இதற்குக் காரணம். இறையன்பைக் காட்டும் மாதிரிகளாகத் தாங்கள் இருக்கவேண்டும் என்ற அந்தப் பொறுப்பில் தவறிவிட்டார்கள்.

நல்லோர் மேலும் தீயோர் மேலும் சூரியனை உதிக்கச் செய்யும் அந்த இறைவனின் தூய அன்பைக் காட்ட பெற்றோர்கள் தவறிவிட்டதே இன்றைய சமுதாயம் இந்த இழிநிலை அடைந்ததற்கான காரணமாகும்.

நல்லது செய்தால் மாத்திரமே பிள்ளைகளை நேசிகக்கும் பெற்றோர்கள் இறையன்பைத் தமது பிள்ளைகளுக்குக் காட்டத் தவறிவிடுகின்றார்கள். இப்படிப்பட்ட பெற்றோரால் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் இறைவனும் அப்படிப்பட்டவரே என்று கணித்துவிடுகின்றார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகள் இறைவனோடு கூட எதிர்க்கட்சியினராகவே செயல்படுகின்றனர்.

நிபந்தனையோடு நேசிக்கப்படடல் என்பது சிறுவர் சிறுமியரின் சுய மதிப்புக்கு சாவு மணி அடித்தது போலாகும். இத்தகைய பிள்ளைகள் தீர்மானங்களை எடுக்கப் பயப்படுகின்றனர். ஒருவேளை தாங்கள் எடுக்கும் தீர்மானம் தவறாக இருந்து விட்டால் என்ன செய்வது என்ற கேள்வி அவர்களை அலைக்களிக் கின்றது. ஒருவேளை நாம் மற்றவர்களால் ஒதுக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் வேறு தலை தூக்கி இறுதியில் தங்களுக்காக மற்றவர்ளே தீர்மானிக்கட்டும்; அது நிச்சயம் தங்களுக்குப் பாதுகாப்புள்ளதாக இருக்கும் என்று எண்ண ஆரம்பித்து விடுகின்றனர்.

முடிவு என்ன தெரியுமா? இத்தகைய போக்கின் முடிவு என்னதெரியுமா? இத்தகைய பிள்ளைகள் தங்களைப்பற்றி நிச்சயமற்றவர்களாய் பாதுகாப்பற்ற உணர்வோடு பிறரைச் சார்ந்தே வாழ வேண்டியதாகின்றது.

பெற்றோராகிய உங்களை நோக்கி, 'நீங்கள் நிபந்தனை இன்றி, அதாவது, உங்களது பிள்ளைகள் நல்லது செய்யினும் கெட்டது

**திருமதி. ஜெ. கமலா**

செய்யினும் எச்சமயத்திலும் மனதார நேசிக்கின்றீர்களா?' என்று கேட்டால் நீங்கள் அனைவரும் ஏகக் குரலில் 'ஆம்' என்றே கூறிவிடுங்கள். நீங்கள் அவ்வாறு கூறிவிடலாம்; ஆனால் உங்களது பிள்ளைகள் நீங்கள் அவர்களை நேசிப்பதை எந்த மட்டிற்கு அறிந்திருக்கிறார்கள் என்பது தான் இங்கு முக்கியம். உங்கள் பிள்ளைகள் அதிகாரத்தை ஏற்று அதற்குக் கீழ்படியவேண்டுமானால், அவர்களை நல்ல தீர்மானங்கள் எடுப்பவர்களாக உருவாக்க வேண்டுமானால், தங்களது சுய மதிப்போடு இவ்வுலகில் சிறப்பான முறையில் வாழ வைக்க வேண்டுமானால், பெற்றோர்களே, நீங்கள் உங்களது பிள்ளைகளை நிபந்தனையின்றி நேசியுங்கள். இறையன்பு உங்கள் மூலமாக உங்களது பிள்ளைகளிடத்தில் வழிந்தோடட்டும். உங்களது மாயமற்ற அன்பை உங்களது சொற்களிலும் செயல்களிலும் தெளிவாகக் காட்டுங்கள். எச்சமயத்திலும் உன்னை நேசிக்கின்றேன். ஏனென்றால் நீ என்னுடையவன் என்று உங்களது பிள்ளையிடம் உரத்துக் கூறுங்கள் ஆம், பெற்றோர்கள் அப்படித் தான் நேசிக்கவேண்டும். □

---

# மாண்புறு மகளிர் விருதுக்கு ஜனாதிபதி சந்திரிகா தெரிவு

(கொழும்பு)

கிராமிய அபிவிருத்தி, சமாதானம் என்பவற்றுக்குப் பாடுபட்



டமை மற்றும், 1970 ஆம் ஆண்டுகளில் உணவு விவசாய ஸ்தாபனத்தின் முயற்சிகளுக்குத் தனிப்பட்ட முறையில் உதவிகளை வழங்கியமை, என்பவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் விதத்தில் உலக உணவு ஸ்தாபனம் 'சேரஸ்' என்ற மாண்புறு மகளீருக்கு வழங்கப்படும் தங்கப்பதக்கத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு வழங்கவிருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ஜியாக்டியூ நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் வைத்து ஜனாதிபதிக்கு இந்த விருதை வழங்குவார்.

இதேவேளை, இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அன்னை தெரேசா, இலங்கையின் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருக்கும் இந்த விருது முன்னர் வழங்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-60,10)

## பரிசில் தினம்

யோகர் சுவாமிகள் ஞாபகார்த்த பரிசில தினம் இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி.வ. சிவபாலன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ். கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.எஸ்.தங்கராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-117)

# பாராளுமன்ற அமளிதுமளிகள் சி. டி. தட்டில் வெளிவரும்

## ஹெல உறுமய நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த பாராளுமன்ற சபாநாயகர் தெரிவின் போது பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமளிதுமளிகளை சி.டி. தட்டுக்களில் பதிவு செய்து வெளியிடுவதற்கு ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

சபாநாயகர் தெரிவின் போது பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பினர் ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது மேற்கொண்ட அவதூறான வார்த்தைப் பிரயோகங்கள் உட்பட இழிவான ஏனைய செயற்பாடுகளையும் வெளியுலகுக்குத் தெரியப்படுத்தி, 'சர்வதேச அபிப்பிராயம்' ஒன்றை ஏற்படுத்துவதே இச் சி.டி.தட்டுக்கள் வெளியிடப்படுவதன் நோக்கமாகும்.

இது விடயம் குறித்து ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிடுகையில்,

பாராளுமன்ற சபாநாயகர் தெரிவு இடம்பெறும் போது, ஆளும் தரப்பு உறுப்பினர்கள் ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆளும் தரப்பினரின் இவ்வாறான செயற்பாடுகளை யாவரும் அறிந்து கொள்ளும் முகமாகவே அவற்றை சி.டி.தட்டுக்களில் பதிவு செய்து வெளியிடவுள்ளோம். அதேநேரம், இத் தட்டுக்கள் சர்வதேச நாடுகளின் அரசியல் தலைவர்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன எனத் தெரிவித்தார். (உ-18)

# சட்டவிரோத மின் பாவனையால் மாதம் 10 மில்லியன் இழப்பு

(மட்டக்களப்பு)

சட்டவிரோத மின் பாவனை காரணமாக மட்டக்களப்பு மாவட்ட மின்சார சபை மாதம் ஒன்றிற்கு சுமார் 10 மில்லியன் ரூபாவை இழப்பதாக இம்மாவட்டத்தின் மின்சாரசபைப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புப் பகுதிக்கு வழங்கப்படும் மின்சார அலகுகளில் 50.23 வீதமான மின்சாரம் சட்ட விரோத மின்பாவனையாளர்களால் பெறப்பட்டு வருகிறது. இதனால் முறையான விதத்தில் மின்பாவனை செய்துவருவோர் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகிறன்றனர்.

இதன் காரணமாக மேற்படி மாவட்டத்தில் மின் ஒழுக்குகளால் ஏற்படும் அனர்த்தங்கள் அடிக்கடி இடம் பெறுவதுடன் இதனால் கடந்த 5 ஆண்டுகளில் 50 ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். (உ-4,61)

# தரம்-5 புலமைப்பரிசில்
# பயிற்சி வினாத்தாள்

இல:05 ஆக்கம்: சுந்தர்

❖ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.

❖ கீழ்வரும் படங்களை அவதானித்து பொருத்தமான தொடரின் கீழ்க் கோடிடுக.


01. 
1) காலை - வாசம் - தேனீ
2) மரம் - வாசம் - நிறைகுடம்
3) படிப்பு - மலர் - மாலை

02. 
1) தகவல் - குறுகிய நேரம் - பரிமாற்றம்
2) செய்தி - குறுகிய நேரம் - வழங்கல்
3) தகவல் - நீண்ட நேரம் - வழங்கல்

❖ வினா 3-4 வரையான அடங்கல் வரிப்படங்களுக்குரிய எண் கூட்டத்தின் கீழ்க் கோடிடுக.


03. 

| | |
|---|---|
| 1) A = 2,3,5,7,9 | B = 2,4,6,8,10 |
| 2) A = 2,4,6,8,10 | B = 3,5,7,9,11 |
| 3) A = 2,4,6,8,10 | B = 2,4,6,7,9 |

04. 

| | |
|---|---|
| 1) A = 2,3,5,7,9 | B = 2,4,6,8,10 |
| 2) A = 2,4,6,8,10 | B = 3,5,7,9,11 |
| 3) A = 2,4,6,8,10 | B = 12,14,16,18,20 |


❖ வினா 05-10 வரை சரியான விடைக்குரிய இலக்கத்தினை புள்ளிக்கோட்டில் எழுதுக.

05. 
இங்குள்ள இரு கூடுகளுக்கும் பொதுவாக உள்ள எண்கள்.
1) 3,2 2) 4,5 3) 7,8 (................)

06. நாம் ஆலயத்துக்குச் செல்வதால்,
1) பலரையும் சந்தித்து உரையாடும் வாய்ப்பு ஏற்படும்.
2) மனம் அமைதியும் நிறைவும் பெறும்.
3) நமது ஆடை, ஆபரணங்களின் தரத்தை எல்லோருக்கும் காட்டலாம். (................)


07. நீரில் வாழும் பறவை.
1) கிளி 2) தவளை 3) வாத்து (................)

08. எம்மைச் சூழ இருப்பது.
1) நீர் 2) வளி 3) வீடு (................)

09. 
இந்த அடையாளத்தை
1) வைத்தியசாலையில் காணலாம்.
2) வாகனங்களில் காணலாம்.
3) பாடசாலைகளில் காணலாம். (................)

10. காதுக்கு கேட்டல் போல கண்ணுக்கு
1) தொலைக்காட்சி 2) கண்ணாடி 3) பார்வை 4) கண்ணீர் (................)

❖ சுருக்கமான விடை தருக.




11. இவ்வுருவில் சதுர வடிவமான முகங்கள் எத்தனை உண்டு. (................)
12. இவ்வுருவில் செவ்வக வடிவமான முகங்கள் எத்தனை உண்டு. (................)
13. இவ்வுருவின் சதுர முகத்தின் நீளம் எவ்வளவு? (................)
14. இவ்வுருவில் உள்ள செவ்வக வடிவான முகம் ஒன்றின் நீளம், அகலம் ஆகியவற்றை எழுதுக.

நீளம் (................) அகலம் (................)

15. இவ்வுருவின் கணிதப் பெயர் யாது? (................)

16. **100 - 50 - 25** என்பதனைச் சுருக்க வரும் விடையின் உரோமன் இலக்கப் பெறுமானம் என்ன? (...............)


17. இலங்கையின் வரைபடத்தை வரைந்தவர் பெயரை எழுதுக. (..........................)


18. எல்லா மதத்தவரும் போற்றி வழிபடும் இலங்கையில் உள்ள மலை ஒன்றின் பெயரை எழுதுக. (..........................)


19. இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறும் நூல் எது? (..........................)

20. "கறி அடுப்பிலே கரி சமைத்தான்" இவ்வாக்கியத்தில் உள்ள இரு எழுத்துக்களை இடம்மாற்றி எழுதுவதன் மூலம் வாக்கியத்தை திருத்தி எழுதுக.
(..............................................................................................)


❖ கீழ்வரும் தொடர்களில் அடுத்து வரவேண்டிய உரு / தொடரைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

21 
(1) (2) (3) (4)


22. 
(1) (2) (3) (4)

23. 

(1) (2) (3) (4)

24. 

(1) (2) (3) (4)

25. 

1) 24 2) 12 3) 27 4)6

❖ மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக.

26. கீழ்வருவனவற்றில் வித்தியாசமாக உணவுண்ணும் பழக்கமுடையது.
1) யானை 2) பாம்பு 3) புலி 4) முயல்

27. I சித்தியடைதல், II விண்ணப்பித்தல் III பரீட்சை எழுதுதல் IV கற்றல்
என்பதன் சரியான ஒழுங்கமைப்பு
1) I,II,III,IV 2) IV,III,II,I 3) IV,II,III,I 4) II, III, IV

28. ஒரு மரக்கிளையில் 20 பறவைகள் இருந்தன. அவற்றுள் 2 பறவைகளை வேடன் ஒருவன் சுட்டு வீழ்த்தினான். எஞ்சியிருந்த பறவைகள்
1) 18 2) 10 3) சில 4) 0

29. வித்தியாசமான சேர்மானம்
1) வெப்பமானி - சூடு 2) மழைமானி -மழை
3) அளவுநாடா - நீளம் 4) அடுப்பு - சூடு

30. வித்தியாசமான சொல்
1) எழுத்து 2) சொல் 3) வாக்கியம் 4) இலக்கம்

❖ முதலாவதாகத் தரப்பட்டுள்ள வாக்கியத்தை நன்கு விபரிக்கும் விடைக்குரிய இலக்கத்தைத் தரப்பட்ட கூட்டினுள் எழுதுக.

31. "பாத அணிகளை காலிலேயே அணிகின்றோம்"
1) கைகளால் நடப்பதில்லை 2) காலில் அணிவது இலகு.
3) சுகாதாரம் பேணுவதற்கு 4) பாதம் தான் தேய்வடையும்

32. "தாய் சொல்லைத் தட்டாதே"
1) தாய் சொல் கேட்க வேண்டும் 2) தாய் வார்த்தையை மதிக்கக் கூடாது
3) தாயை நன்கு ஏச வேண்டும் 4) எல்லாமே தவறான விளக்கம்


33. "புகைத்தல் உடல் நலத்துக்குக் கேடாகலாம்"
1) புகைப்பது நாகரீகம் 2) புகைப்பது உடலுக்கு உறுதி
3) சுவாச நோய்கள் வரலாம் 4) சுறுசுறுப்பாக இருக்கலாம்

34. "எங்கள் அதிபர் மேடையில் நின்று பேசும்போது குண்டூசி விழுந்தாலும் சத்தம் கேட்கும்"
1. அதிபர் மிக மெதுவாகப் பேசுகின்றார். 2) குண்டூசி விழும் ஒலி மிகப் பெரியது
3. கூட்டத்தில் எவரும் இல்லை. 4) எல்லோரும் அமைதியாக உள்ளனர்

35. "முற்றத்தில் உள்ள மாமரத்தின் கீழ் ஈரமாக இருந்தது"
1. மழை பெய்துள்ளது 2) நிழல் காரணமாகலாம்
3 நீர் ஊற்றப்பட்டிருக்கலாம் 4) மழை பெய்யவில்லை


❖ 36 முதல் 40 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள தகவல்களை சரியாக காண்பிக்கும் உருவத்தின் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

36 
1 2 3 4
* ஒழுங்கான தள உருவம்
* எல்லாப் பக்கங்களும் சமன்
* எல்லாக் கோணங்களும் சமன்
* மூன்று சமச்சீர் அச்சுக்கள் உண்டு


37. 
1 2 3 4
* வட்ட முகம் * நீள்வட்டக் கண்
* செவ்வக வாய் * முக்கோண மூக்கு

❖ 38 முதல் 39வரையிலான வினாக்களில் முதலாவதாகக் காட்டப்பட்டுள்ள படத்தின் ஒரு பகுதி நீக்கப்பட்டுள்ளது. அந்த இடைவெளிக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

38. 
(1) (2) (3) (4)

39. 
(1) (2) (3) (4)

40. அதிக எண்ணிக்கையான செங்கற்கள் உள்ள குவியல் எது?


(1) (2) (3) (4)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினா இல: 03

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு.**

01. உ.டிலக்சனா - உடுவில் மகளிர் கல்லூரி.
02. ஜெ.மயூரிஜெயா - வல்வை.றோ.க.த.க. பாடசாலை.
03. சி.ஜெயக்குமார் - வல்வை.அ.மி.த.க. பாடசாலை.
04. பி.ஜோதிகா - வல்வை.சிவகுரு வித்தியாசாலை.
05. பு.விந்துஜா - வல்வை. மகளிர் மகாவித்தியாலயம்.
06. க.சாரங்கன் - யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி.
07. பி.லக்சிகா - வல்வை.அ.மி.த.க. பாடசாலை.
08. ச.நித்தியா - வல்வை. மகளிர் மகாவித்தியாலயம்.
09. செ.அனுசிகா - வல்வை. மகளிர் மகாவித்தியாலயம்.
10. கு.வினஜா - வல்வை. விநாயகர் வித்தியாலயம்.
11. த.கௌரி - வல்வை. மகளிர் மகாவித்தியாலயம்.
12. பி.சர்மினி - வல்வை. மகளிர் மகாவித்தியாலயம்.
13. வி.கல்யாணி - வல்வை.றோ.க.த.க. பாடசாலை.
14. ச.குணசுகி - வல்வை.றோ.க.த.க. பாடசாலை.
15. வி.கஸ்தூரி - வல்வை.றோ.க.த.க. பாடசாலை.
16. தூ.பேனாட் ரிஷாந்த் - யாழ்.பரியோவான் கல்லூரி.
17. யோ.ஜெரோஷன் - வதிரி.திருஇருதயக் கல்லூரி.
18. யோ.ஜெரோம் - வதிரி.திருஇருதயக் கல்லூரி.
19. சி.விகாஷன் - சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்
20. ப.துவாரகன் - நல்லூர் புனித ஜோன்பொஸ்கோ.
21. பே.சறோன் டிலக்ஷி - உடுவில் மகளிர் கல்லூரி.
22. லோ.சுஜிதா - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
23. க.விஷ்ணுவர்த்தன்- யாழ்.பரியோவான் கல்லூரி.
24. இ.மயூரதன் - உரும்பிராய் சைவத் தமிழ்வித்தி.
25. சு. கீர்த்தனா - கரவெட்டி மாணிக்கவாசகன் வித்தி.
26. கெ.சுபாகரன் - வதிரி திருஇருதயக் கல்லூரி.
27. வி.பிரவீனா - நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை.
28. சி.மதுஷன் - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
29. பா.பாலபத்மன் - புற்றளை மகாவித்தியாலயம்.
30. சி.தாட்சாயினி- கைதடி முத்துக்குமாரசாமி மகா.வித்தி.
31. ச.தர்ஷிகா - சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்.
32. பா. அனிதா - வட.இந்து மகளிர் கல்லூரி.
33. க.செல்வி - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
34. பு.லதுஷா - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
35. கு.சலோமி சரணியா - யாழ்.புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
36. நே.ஜோய்கரன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
37. ப. பிரவீனா - நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை.
38. வி.குருநந்தனன் - யாழ்.மத்திய கல்லூரி.
39. ஆ.அனஸ்ரிக்கா - உடுவில் மகளிர் கல்லூரி.
40. ரா.திவாகர் - வல்வை. விநாயகர் வித்தியாலயம்.
41. இ.தனுஷியா - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
42. த.நினுஜா - நுணாவில் அமிர்தாம்பிகை வித்தி.
43. பி.சஜீத்ரா - தம்பசிட்டி மெ.த.க. பாடசாலை.
44. நி.நிவேதா - யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
45. ம.துளசி - கோண்டாவில் இராமகிஷ்ண மகாவித்தியலாயம்.
46. இ.சிந்துஜா - மானிப்பாய் சோதிவேம்படி வித்தி.
47. த.தபோஜனன் - இணுவில் மத்திய கல்லூரி.
48. வி.விதுஷன் - வல்வை.றோ.க.த.க. பாடசாலை.
49. வ.குகன் - வல்வை.சிவகுரு வித்தி.
50. அ.சுபேதன் - துன்னாலை காசிநாதர் வித்தி.
51. பு.தேனிலன் - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
52. ஜெ.திசோபன் - திருநெல்வேலி இ.த.க. பாடசாலை.
53. தெ.கனிஷ்டன் - கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை.
54. சி.கவிதா - அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.
55. ந.கஜீபன் - யாழ்.மத்திய கல்லூரி.
56. வி.கிஸ்ணதீபா - நயினை நாகபூஷனி வித்தியாலயம்.
57. செ.பத்மப்பிரியா - கரம்பொன் சிறியபுஷப மகளிர் மகாவித்தி.
58. பி.கிந்துஜா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
59. வி.தினேஸ் - யாழ்.மத்திய கல்லூரி.
60. வி.கஜனி - வேலணை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.
61. சி.வர்ணலால் - புற்றளை மகாவித்தியாலயம்.
62. நி.நிருஷாந்த் - நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை.
63. ந.சங்கீதன் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
64. ம.கவீந்திரன் - யாழ்.மத்திய கல்லூரி.
65. த.விக்னராஜ் - வல்வை றோ.க.த.க. பாடசாலை.
66. பா.தர்சன் - யாழ்.வைத்திலிங்கம் வித்தியாலயம்.
67. இ.கார்த்திகா - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
68. க.திலக்ஷி - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
69. இ.கிருஷ்சிகா - சாவக்சசேரி இந்து் ஆரம்பப் பாடசாலை.
70. ப.ஆதிரை - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
71. ர.ரவிசுஜாந் - மல்லாகம் கனிஷ்ட வித்தி.
72. ச.லக்ஷிகா - திருநெல்வேலி இ.த.க. பாடசாலை.
73. த.சயன் - யாழ்.பரியோவான் கல்லூரி.
74. த.உஷாந்தினி - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
75. க.சியாமினி - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
76. நா.தர்ஷிகா - உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.
77. த.கலாநிதி - வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி.
78. இ.றொஜிதா - கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
79. ர.டில்ஷன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
80. செ.சஜேந்திரன் - யாழ்.புனித பத்திரிசிரியார் கல்லூரி.
81. சௌ.கோபிராஜ் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
82. பா.சத்தியகுகன் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
83. ச.அபிலாஷா - ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை.
84. கி.மகிழினி - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
85. ந.கேகஜன் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாட்சாலை.
86. கு.விதுர்ஷன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
87. ம.மதுஷனா - கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தி.
88. உ.தர்ஷிகா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
89. பி.ஸ்ரீசபீக்கா - யாழ்.கன்னியர் மடம் மகளிர் மகாவித்தி.
90. க.திகல்யா - மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.
91. ம.டக்ஸ்சன் - மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.
92. வே.விதூசன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
93. மு.காயத்திரி - ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
94. இ.கிருபாகரன் - துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை.
95. ந.கோபிகா - சுழிபுரம் ஐக்கியசங்க வைசவித்தி.
96. ச.தமிழினி - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
97. ம.துஷ்யந்தி - உரும்பிராய் சந்திரோதய வித்தி.
98. சி.குணேசன் - உடுவில் மகளிர் கல்லூரி.
99. க.கெய்ஷிகா - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
100. சி.ஜனகன்- வ.தமிழ் மகாவித்தியாலயம்.
101. செ.கிருஷாந்தன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
102. சி.பிரசாந் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
103. தி.செந்தியா - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
104. கெ.நிஷாந்தினி - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
105. ச.சத்தியா - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
106. ஜெ.சாம்பவி- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
107. பா.திவ்வியா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
108. ரா.கபில்ராஜ் - தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை.
109. சி.மதீசன் - கைதடி முத்துக்குமாரசாமி மகர்வித்தி.
110. சி.துளசிகா - கொடிகாமம் திருநாவுக்கரசு மகா.வித்தி.
111. க.ரமனுஜா - புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி.
112. ந.யதுர்ஷன் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.
113. கு.டயந்தன் - யாழ்.மத்திய கல்லூரி.
114. கை.சுரே - வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி.
115. க.தயானா - யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
116. பா.தரணிகா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
117. மா.கஜலக்ஷி - யாழ்.இந்து மகளிர் பாடசாலை.
118. க.சுலக்சன் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
119. சு.சுமேனன் - தேவரையாளி இந்துக் கல்லூரி.
120. க.சங்கீதா - தேவரையாளி இந்துக் கல்லூரி.
121. வ.சரண்யா -, கைதடி விக்னேஸ்வரா வித்தி.
122. சே.திவாகரன் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
123. ப.துவாரகன் - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
124. வி.கம்சிகா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
125. ஜெ.ஜெயலதன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
126. பா.கௌசிகன் - உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.
127. இ.பிரசன்னா - யாழ்.டிறிபேக் கல்லூரி.
128. வி.டினேஸ் - ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
129. சி.சிவதர்ஷன் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.
130. வி.கபிலன் - கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.
131. வி.வித்யா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
132. ஜெ.திவ்வியன் - வதிரி. திருஇருதயக் கல்லூரி.
133. செ.கோகிலன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
134. ம.சயந்தினி - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
135. இ.கார்த்திகா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.
136. பா.துஷாந்தினி - வேலணை நடராஜ வித்தியாலயம்.

## வினாத்தாள் 03 இன் விடைகள்

01. (3)
02. (2)
03. (3)
04. (2)
05. (1), (4)
06. (4)
07. (1)
08. (3)
09. (1)
10. (2)
11. (4)
12. (1)
13. (3)
14. (3)
15. இலங்கை மத்திய வங்கி
16. ரூபா 21.00
17. ரூபா 75.00
18. பிற்பகல் 2.30
19. $\Delta x$ 4
20. சிறியவன்
21. அருண்யா
22. பிரணவன்
23. இரண்டு
24. 1. அருண்யா- சாம்பவி
    2. சிறிவரன் - ரேவதி
    அல்லது
    1. சிறிவரன் - அருண்யா
    2. ரேவதி - சாம்பவி
25. (4)
26. (3)
27. (2)
28. (2)
29. (3)
30. 17
31. 16
32. 1;9
33. 1
34. 3,4
35. 56
36. (2)
37. (1)
38. (3)
39. (2)
40. (2)

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் ~05

**மாணவர் முழுப்பெயர்:** ....................................

**பாடசாலை முகவரி :** ....................................

**வீட்டின் முகவரி :** ....................................

**மாணவர்களே! உங்கள் விடைகளை 31.05.2004 இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.**

**வலம்புரி**
**கல்விப்பகுதி,**
**15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக் களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங் களை சரியாகக் குறிப்பிடவும். பாட சாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

## ஜே.வி.பி. எம்.பி. இராஜினாமா

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப்பட்டியல் பாரளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

தனது சுயவிருப்பத்தின் பேரில் பி.கே.தர்மசிறி லியனகே என்ற பாராளுமன்ற உறுப்பினரே நேற்று முன்தினம் இந்த இராஜினாமாவைச் செய்துள்ளார். இவரது வெற்றிடத்திற்கு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் மிக விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-18)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் இவ்வாண்டிற்கான பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவ்ராக ஏ.எஸ். டிலான், உபதலைவர்களாக ஜி.டி.டானியல் மதியழகன், பி.இ.ஹென்றி, செயலாளராக எஸ்.அகிலன், உபசெயலாளராக கே.எ.தேவபாலன், பொருளாளராக பி.அன்சலம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (உ)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் கடல்வள அபிவிருத்தி நிலையம் அக்குவா சேவிசஸ் (பிறைவேற்) லிமிட்டெட் மற்றும் போரூட் நிறுவனங்களின் அனுசரணையுடன் நடத்தும் பண்ணையில இறால் வளர்ப்புப் பற்றிய செயலமர்வு இன்றும், நாளையும் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

மீண்டும் உங்கள் வலம்புரியில்

விவாத அரங்கு

விடயம்

தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்

பலப்படுகின்றது

பலவீனப்படுகின்றது

உங்கள் கருத்துக்களை
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

பிரதி வெள்ளி தோறும்
வலம்புரியுடன்

KID'S OF ENGLISH

வெளிவரவுள்ளது.
பள்ளிச் சிறுவர்களே!
மற்றும் பருவத்தினரே!
பயனடைய வாங்குங்கள்.

Kid's of English

# தி. மு. க. அமைச்சர்களின் இலாகாக்கள் சம்பந்தமான ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை

## கருணாநிதியின் ஆவேசமான கண்டனம்

(சென்னை)

காங்கிரஸ் சார்பில் உறுதியளிக்கப்பட்டபடி தி.மு.க. அமைச்சர்களுக்கு இலாகாக்கள் ஒதுக்கப்படாததால் எழுந்துள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாகப் பிரதமர் மன்மோகன் சிங் எடுக்கும் முடிவைப் பொறுத்தே காங்கிரஸ் கூட்டணி அரசில் தி.மு.க.தொடர்வது பற்றி முடிவு எடுக்கப்படுமென அக்கட்சியின் தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தி.மு.கவின் முடிவு மன்மோகன் சிங் அமைச்சரவையின் ஸ்திரத் தன்மையைப் பாதிக்கக் கூடிய அச்சுறுத்தலாக அமையாது என்றார்.

இப் பிரச்சினைக்குக் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரைச் சுற்றியுள்ள சிறிய குழு தான் காரணம் என்றார்.

இந்தப் பிரச்சினைக்குக் காரணமானவர்களை அடையாளம் கண்டு இப்பிழையைத் திருத்திக் கொள்வது நல்லது என்றார் அவர்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ஜனார்த்தன ரெட்டியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி தமது கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ரி.ஆர்.பாலுக்கு தரைவழிப் போக்குவரத்துத் துறையுடன் கப்பல்போக்குவரத்துத்துறையும், அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கத்துக்கு வருவாய்த் துறையும், அமைச்சர் எஸ்.ரகுபதிக்கு உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையுடன் தனியார் நலத் துறையும் வழங்கப்பட்டிருக்க வேண்டுமென்று கருணாநிதி சுட்டிக்காட்டினார். இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாணப்பட வேண்டுமென்று தம்முடன் தொலைபேசியில் பேசிய டாக்டர் மன்மோகன் சிங்கிடம் தான் தெரிவித்ததாகவும 10 நாள் கால அவகாசம் தேவையென்று பிரதமர் தன்னிடம் கூறியதாகவும் கருணாநிதி தெரிவித்தார்.

இப்பிரச்சினை பற்றி விவாதிக்க தி.மு.க.வின் உயர் நிலைக் கூட்டம் சென்னையில் நடைபெற விருப்பதாக அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையே, இப் பிரச்சினை தீரும் வரை பா.ம.க.வைச் சேர்ந்த இரண்டு அமைச்சரும் பொறுப்பேற்க மாட்டார்கள் என்று பா.ம.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக, புதுடில்லியில் வர்த்தக, தொழில் அமைச்சர் கமல்நாத்தும், தகவல் தொழில்நுட்ப அமைச்சர் தயாநிதி மாறனும் காங்கிரஸ் தலைவர் சோனியா காநதியுடனும் பிரதமர் மன்மோகன் சிங்குடனும் இப்பிரச்சினை குறித்து ஆலோசனை நடத்தினார்கள்.

பிரதமருடனான சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய கமல்நாத், கூட்டணி அரசியலில் இது போன்ற சிக்கல்கள் எழுவது இயற்கை தான் என்றும், இப் பிரச்சினை மிகச்சிறியது தான் என்றும், தி.மு.க.வுடன் காங்கிரஸ் கொண்டுள்ள ஸ்திரமான உறவு தொடர்ந்து நீடிக்குமென்றும், இப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான சரியான வழிமுறை பின்பற்றப் பட்டு வருவதாகவும் கூறினார்.(து)



அசோகா மண்டபத்தில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்ட முக்கிய தலைவர்களும் பதவி ஏற்றுக்கொண்ட அமைச்சர்களும் ஒன்றாகச் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.



இந்தியாவின் புதிய பிரதமராக கடந்த சனிக்கிழமை பதவியேற்றுக் கொண்ட பின், மன்மோகன் சிங் அலுவலகக் குறிப்பில் கையெழுத்திடுகிறார்.

## அ.தி.மு.கவுடன் கூட்டணி தொடருமா? திருநாவுக்கரசர் பேட்டி

தமிழகத்தில் 2006 இல் நடக்கவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் பா.ஜ.க. கூட்டணி தொடருமா என்பது பற்றி கட்சியின் அகில இந்தியத் தலைமைதான் முடிவு செய்யும் என்றார் பா.ஜ.க. செயற்குழு உறுப்பினரும முன்னாள் மத்திய அமைச்சருமான எஸ்.திருநாவுக்கரசர்.

சென்னையில் நிருபர்களிடம் அவர் நேற்று முன்தினம் பேசுகையில், மத்தியில் யார் ஆட்சிக்கு வரவேண்டும் அல்லது வரக்கூடாது என்ற அடிப்படையில் மக்களவைத் தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. பெரும்பாலான மாநிலங்களில் ஆளும் கட்சிக்கு எதிராகவே மக்கள் வாக்களித்துள்ளனர். தமிழகமும் அதற்கு விதிவிலக்கல்ல என்றார்.

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி அமுல் செய்த சட்டங்களும் , திட்டங்களும் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்திவிட்டன. கூட்டணிக் கட்சியினர் தேர்தலில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று அ.தி.மு.க. தலைமை நிபந்தனைகள் விதித்தது.

தேர்தல் தோல்விக்கு இவை இரண்டும் தான் முக்கிய காரணங்கள். எதிர்காலத்தில் இது போன்ற தவறுகள் நடக்கக் கூடாது என்பதற்காகவே இவற்றைச் சுட்டிக்காட்டுகிறேன் என்று அவர் தெரிவித்தார்.

அடுத்த 2 ஆண்டுகளில் வரவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. தனித்துப் போட்டியிட வேண்டும் என்பது என் தனிப்பட்ட விருப்பம். கட்சித் தொண்டர்கள் பெரும்பாலானோர் இதையே விருமபுகின்றனர் என்றும் இம் மாதம் 30 ஆம் திகதி நடக்கும் மாநில செயற்குழு கூட்டத்தில் இக் கருத்து முன் வைக்கப்படும்; அதில் எடுக்கப்படும் முடிவுகள் கட்சித் தலைமைக்கு தெரிவிக்கப்படும். தேர்தல் கூட்டணி பற்றி கட்சித் தலைமை அறிவிக்கும் முடிவை ஏற்போம் என்றும் திருநாவுக்கரசர் கூறினார். (து)

இந்தியச் செய்திகள்

# ஜெயலலிதாவின் எழுச்சியும் வீழ்ச்சியும் தமிழக அரசியல் அலசல்

*(கடந்த திங்கள் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)*

இந்த வழக்கின் மேல்முறையீட்டை விசாரணை செய்த உச்ச நீதிமன்றம், ஜெயலலிதாவுக்கு தண்டனை அளிக்காவிட்டாலும் வழக்கு விசாரிக்கப்பட்ட முறை, அரச வழக்கறிஞரின் நடத்தை, அரசு நிலத்தை முதலமைச்சரே அடிமாட்டு விலைக்கு வாங்கிய நடைமுறை ஆகியவற்றை கடுமையாக விமர்சித்து டான்சி நிலத்தை திரும்ப அரசாங்கத்திடமே ஒப்படைக்குமாறும் ஜெயலிலதாவுக்கு உத்தரவிட்டது.

அரசுக்குரிய ஒரு நிலத்தை முதலமைச்சர் ஒருவர் வாங்குவது என்பது எவராலுமே ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம் என்பதை ஜெயலலிதா உணராமல் விட்டது ஆச்சரியமே!

இதனையும் பொது மக்கள் மௌனமாகப் பார்த்துக் கொண்டு தான் இருந்தார்கள்.

அடுதது, விசாரணையில் இருந்த அளவுககு மீறிய சொத்துக் குவிப்பு வழக்கை முந்திய வழக்குகளைப் போல தமிழ் நாட்டில் அரச வழக்கறிஞர்களைக் கொண்டு நடத்தாமல், பிறிதொரு மாநிலத்தில் பிறிதொரு வழக்கறிஞரைக் கொண்டு நடத்தவேண்டும் என தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முறையீட்டை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் அவ் வழக்கை கர்நாடக மாநிலத்துக்கு மாற்றி உத்தரவிட்டனர்.

கர்நாடகத்தில் தனக்குப் பாதுகாப்பு இல்லையென்றும், அதனை வேறு ஒரு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் ஜெயலலிதா சமர்ப்பித்த மனுவை உச்ச நீதிமன்றம் ஏற்க மறுத்தது.

இந்நிலையில் சட்டமன்ற பா.ஜ.க. உறுப்பினர்கள் மெல்லமெல்ல தி.மு.க.வை உதறிவிட்டு ஜெயலலிதா பக்கம் சாய ஆரம்பித்தனர்.

பொடா சட்டத்தை காரணம் காட்டி, வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ.வை விமான நிலையத்திலேயே கைது செய்து சிறையிலடைத்தது ஜெயலலிதா அரசு.

18 மாத காலம் அவரை சிறையில் அடைத்து படுத்திய பாட்டை தமிழக மக்கள் பார்த்தக்கொண்டு தான் இருந்தார்கள்.

வாஜ்பாயும், அத்வானியும் கண்மூடி மௌனிகளாகக் காட்சி அளித்தனர். மத்திய அரசால் பாராளுமன்ற சட்டமூலம் அமைக்கப்பட்ட பொடா மறு விசாரணைக்குழு, வை.கோ.வின் கைதுக்கு அடிப்படை ஆதாரம் எதுவும் இல்லை எனத் தீர்ப்பளித்த பின்னரும், இவ் வழக்கில தலையிட அக் குழுவுக்கு அதிகாரமில்லை என்பது போன்ற பல ஆட்சேபனைகளைக் கிளைப்பி அவரை விடுதலை செய்வதில் எவ்விதமான அக்கரையும் இன்றி இருந்தது ஜெயலலிதா அரசு.

இதனையும் மக்கள் மௌனமாக அவதானித்துக் கொண்டு தான் இருந்தார்கள். இவையெல்லாம் ஒன்று சேர்நது பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயக்க முன்னணியில் இருந்து தி.மு.கவையும் ம.தி.மு.க. - பா.ம.க. ஆகியவற்றையும் விலக வைத்தது.

வெளியேறிய இக்கட்சிகள் காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து தமிழ் நாட்டில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அமைத்தன:

இதுவரை காலமும் மெத்தனமாக இருந்த பா.ஜ.க. ஓடி விழிக்க ஆரம்பித்தது.

தி.மு.கவை தம் பக்கம் இழுக்கச் செய்த முயற்சிகள் எல்லாம் தோல்வியடையவே, மக்களவைத் தேர்தலுக்காகத் தமிழ் நாட்டில் ஜெயலலிதாவின் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்க முன்வந்து.

ஆரம்பத்தில் சிறிது கெடுபிடி காண்பித்தாலும் இறுதியில் கூட்டணி அமைக்க ஒப்புக்கொண்ட ஜெயலலிதா, விதித்த நிபந்தனைகள் பா.ஜ.க.வின் கௌரவத்துக்கு விடப்பட்ட சவாலாக அமைந்தது.

இதில் பிரதானமானது புதுக்கோட்டைத் தொகுதி பற்றியது. மத்திய துணை அமைச்சர் திருநாவுக்கரசரின் கோட்டையாக விளங்கியது - விளங்குவது- விளங்கிவருவது புதுக்கோட்டைத் தொகுதி. அத்தொகுதியில் அவரது பெயரைச் சொல்லி ஒரு துருப்பை நிறுத்தினாலும் வெற்றி பெறும் அளவுக்கு அபரிமிதமான ஆதரவைக் கொண்டவர் அவர். ஜெயலலிதா விதித்த நிபந்தனை புதுக்கோட்டைத் தொகுதி பா.ஜ.க.வுக்கு ஒதுக்கப்படமாட்டாது. அன்றியும் திருநாவுக்கரசர் எத் தொகுதியிலும் போட்டியிடக்கூடாது.

எப்படியாவது ஜெயலலிதாவுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தினாலும் நிர்ப்பந்தத்தினாலும் உள்ளூர் பா.ஜ.க. தலைவர்களது வற்புறுத்தல்களாலும் பா.ஜ.க. மான, ரோஷம் இன்றி இந் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது.

மாநிலங்களவை உறுப்பினர்ராக திருநாவுக்கரசை நியமிப்பதாகக் கூறி அவரைச் சமாதானப் படுத்தியது பா.ஜ.க. தொகுதிப் பங்கீடும் ஜெயலலிதாவின் எண்ணப்படியே நடைபெற்றது.

*(தொடரும்)*

## சேலம் உருக்காலை நடவடிக்கைகள் மறு பரிசீலனை செய்யத் தீர்மானம்

சேலம் உருக்காலை உள்ளிட்ட 3 பொதுத்துறை நிறுவனங்களின் செயற்பாடுகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு, அவற்றை இலாபத்தில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அந்த நிறுவனங்களில் பணியாற்றும் சுமார் 7ஆயிரம் ஊழியர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுமென்றும் மத்திய எஃகு துறை அமைச்சர் ராம் விலாஸ பாஸ்வான் கூறியிருக்கிறார்.

எஃகுத் துறையில் இலாபத்தில் இயங்கும் நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படமாட்டா என்றும, அவர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (து)

## விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவச ரயில் பிரயாண அனுமதி

ரயில் பயணிகளின் பாதுகாப்புக்கு முதல் முன்னுரிமை அளிக்கப்படுமென ரயில்வே அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள லாலுபிரசாத் யாதவ் கூறியிருக்கிறார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய போது ரயில்வே துறையை நவீன மயமாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென்றார்.

விடுதலைப் போராட்ட வீரர்கள், அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள், மூத்த குடிமக்கள் ஆகியோர் நாடு முழுவதும் பயணம் செய்ய சிறப்பு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுமென்று லாலு பிரசாத் யாதவ் தெரிவித்தார். (து)

## பொடா சட்டம் தேவையற்றது மத்திய அரசின் கருத்து

பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்று பொடா சட்டத்தைத் தேவையான சட்டமென்று அரசு கருதவில்லையென்றும், அது பற்றி முடிவெடுக்கு முன்பு சட்டத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு செய்யப்படுமென்றும் மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டேல் கூறியிருக்கிறார்.

புதுடில்லியில் தமது அமைச்சரவைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொடா சட்டம் தேவையில்லை என்பதே காங்கிரஸ் கட்சியின் நிலை என்றும், குறைந்த பட்சச் செயல்திட்டத்தின்படி பொடா சட்டம் பற்றி முடிவெடுக்கப்படுமென்றும் கூறினார்.

பொடா சட்டம் விரைவில் ரத்து செய்யப்படவோ, அல்லது அச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவோ அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மத்திய சட்ட மற்றும் நீதித்துறை அமைச்சர் பரத்வாஜ் கூறியிருக்கிறார்.

(து)

# இன்று ஒரு தகவல்

## திறமைதான் நமது செல்வம்

உலகில் எல்லோரும் சந்தோசமாகவும் சிறப்பாகவும் வசதி படைத்தவர்களாகவும் அந்தஸ்து மிக்கவர்களாகவும் வாழவே விரும்புகின்றார்கள். இவை சமுதாயத்தில் நலிவடைவதாற்றான் வசதி படைத்தோர் வசதி குறைந்தோரை மதிக்காது உதாசீனப்படுத்துகிறனர்.

ஒரு போது வசதி மிக்கவர்களாயிருந்தவர்கள் மறுபோது வசதி குறைந்வர்களாகத் துன்பப்படுவதும் இதோபோல் வசதியற்றிருந்தோர் வசதி படைத்தோராக சமுதாயத்திலே உயர்வடைவதும் அனறாட வாழ்வில் நாம் காணக்கூடியதாக உள்ளது.

இதற்கெல்லாம் காரணம் இடம் பொருள் ஏவல் நன்கு அமையாததேயாகும். இம் மூன்றையும் திறம்படப் பெற்றுவிட்டால் வாழ்க்கையிற்தோல்வியடைய வாய்ப்பில்லை. ஆதலால் எதற்கும் திறமை தான் முதலில் அவசியமானதாகும். திறமை இல்லாவிடில் வாழ்க்கையில் எவ்வகையிலும் நிலையான சிறப்பை பெறமுடியாது.

இன்று மக்கள் எத்தொழில் செய்பவர்களாக இருந்தாலும் பணத்திற்கே முதலிடம் கொடுப்பவர் களாக உள்ளனர். பணத்தைச் சம்பாதிக்க விரும்புகின்றவர்கள் தாம் தாம் செய்யும் தொழிலில் திறமை மிக்கவர்களாக இருந்தும் தாம், தாம் செய்யும் தொழிலினைத் தெய்வம் எனக்கொண்டு வாழ்வார்களாயின் அதுவே உண்மையான உழைப்பாகும்.

செய்யும் தொழிலிற் திறைமையற்றவர்களாகக் குறுக்கு வழிகளிற் பொய் புரட்டும் ஏமாற்றும் தந்திரமும் கொண்டே பணம் சம்பாதிக்க எல்லோரும் விரும்புவதனால் அந்த உழைப்பினால் வரும் செல்வமும் மற்றோர் பார்த்திருக்க அவர்களை விட்டுச் செல்வதைக் காணலாம்.

திறமையுள்ளவன் செய்யும் தொழில் எதனிலும் வெற்றி பெறுவான் என்பதில் ஐயமில்லை. ஆனால் திறமையுடையவன் தனது முன்னேற்றத்திற்கான இலக்கை நிர்ணயித்து அதற்கான நலவாய்ப்புக்களைக் கண்டறிந்து முக்கியமான அத்தியாவசியங்கட்கு முன்னுரிமை கொடுத்து நேரத்தை நிர்வகித்து தனக்குத் தானே ஒரு நெறி முறையை வகுத்து துர்ப்பழக்கங்கட்கும். துர்க்குணங்கட்கும் இடமளியாது எத்தொழில் செய்வானாயினும் அவன் அத்தொழிலில் மேன்மையடைவான் என்பது திண்ணமாகும்.

ஒருவருக்கு உள்ள திறமை இயல்பாகவும் அமையலாம் அன்றி அவருடைய ஊக்கம்,உற்சாகம் ,விடா முயற்சிகளாலும் ஏற்றப்படலாம். இதனை விலை கொடுத்து வாங்க முடியாது மனிதானகப் பிறந்தவனுக்கு ஏதோ ஒரு வித திறமையாவது இருக்கும் என்பார்கள். அவனவன் தன் திறமையை வழிகண்டு வளர்த்து முன்னேறவேண்டும். அவரவர் திறமையே அவர்கட்குள்ள அழியாத செல்வாகும்.

**நீர்வை மணி**

# ஊழியர் நம்பிக்கை நிதிய அவசர தேவைக் கொடுப்பனவை 7 நாட்களுக்குள் பெற வசதி

(கொழும்பு)

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் இருந்து அவசர தேவைகளின் நிமித்தம் ஊழியர்கள் பெறக்கூடியதாய் உள்ள கொடுப்பனவுகளை 7 நாட்களுக்குள் கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் தொழில் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டுவருகின்றன.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பயனாளிகளாகவுள்ள 18 இலட்சம் பேர்களில் நிரந்தரமாக நாட்டைவிட்டு வெளியேறுபவர்கள், புற்றுநோய், இதயநோய் சத்திரச் சிகிச்சைகள், நிரந்தர ஊனம், உறுப்பினர் மரணமடைதல், 60வது வயதை அடைந்தமை ஆகிய காரணங்களுக்காக தமக்கான பணத்தை பெற்றுக்கொள்ளவிரும்பியவர்களுக்கே 7 நாட்களுக்குள் அவர்களுக்கான ,கொடுப்பனவுகளை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஏனையவர்கள் வழமை போல் 21 நாட்களிலேயே தமக்கான நிதியைப்பெறமுடியும்.

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு மிக உயர்ந்த வட்டியான 12.1 வீதம் வழங்கப்படுகிறது. அத்துடன் அவர்களுக்கு ஆயுட்காப்புறுதி மற்றும் சத்திரசிகிச்சைகளின் போதான உதவிகள் 5ஆம ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சிய டைந்த உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கான இலவச கொடைகள் வீடமைபுக் கடன் ஆகியனவும் வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

கடற்றொழிலில் ஏற்படும் பிணக்குகள் குறித்து

# தமிழக மீனவர் பிரதிநிதிகள் மன்னாரில் கலந்தாலோசனை

(மன்னார்)

இலங்கையின் வட கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன் பிடித்தலுக்கு தீர்வு காணும் நோக்குடனான இந்திய மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று முன்தினம் மன்னார் வாழ்வோதயக் கேட்போர் கூடத்தில் நடைபெறறது. மன்னார் வாழ்வோதயத்தின் இயக்குநர் அருட்தந்தை எஸ். ஜேசுராசா தலைமையில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் தென்னிந்திய மீனவர் சங்கங்களின் சமாசத்தைச்சேர்ந்த முக்கிய அதிகாரி வி.விவேகானந்தன் தலைமையிலான 21 இந்திய மீனவர்கள் கலந்துகொண்டனர்.

மன்னார் அரசாங்க அதிபர் வே.விசுவலிங்கம் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட பலர் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகளும், இந்திய மீனவர்களும் தமது பிரச்சினைகளை பரஸ்பரம் எடுத்துக்கூறினர். இந்திய மீனவர்களுக்கு தலைமை தங்கி வந்த வி. விவேகானந்தன் கருத்துத்தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்போது நிலவிவரும் அமைதிச் சூழ்நிலையில் எமது மீனவர்கள் அமைதியாக மீன பிடித்து வருகிறார்கள். வங்காள விரிகுடாவில் மீன் பிடிப்பதில் இராமேஸ்வரம்,புதுக்கோட்டை நாகபட்டினம் மீனவர்களுக்கும் மன்னார் யாழ்ப்பாண மீனவர்களுக்குமிடையில் தற்போது கடும் போட்டி நிலவுகிறது.

இவர்களுக்குக்கிடையே பிரச்சினைகள் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் உள்ள மீனவர்களின் பிரதிநிதிகளான நாங்கள் யாழ்ப்பாணம் மன்னார் மாவட்டங்களில் உள்ள மீனவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி இந்த விடயத்திற்கு எப்படித் தீர்வு காணமுடியும் என ஆலோசனை நடத்தவே இங்கு வந்துள்ளோம்.

இந்தத்கூட்டத்தில் என்ன ஆலேசனைகள் வருகின்றன எனப் பார்த்துவிட்டு நாங்கள் இதனை இரண்டு நாட்டு அரசாங்கங்களுக்கும் எடுத்துக் கூறுவோம். தேவைப்பட்டால் இது குறித்து அரசாங்கங்களுககிடையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எட்டப்படலாம் எனத்தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் தூதுக்குழு இலங்கையில் வரும் 28ஆம் திகதி வரையில் தங்கியிருந்து முக்கிய சந்திப்புகளில் கலந்துகொள்ளும் எனத்தெரிவிக்கப்பட்டது. (உ-121)

அபி. நலவுரிமைச் சங்கம்

# மீள்குடியேற்றம் குறித்து ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(கொழும்பு)

வலி வடக்கு பொன்னாலை, தனங்கிளப்பு, மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவதன் அவசியத்தை வலியுறுத்தி யாழ். மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச் சங்கம் சார்பில் அதன் தலைவர் செ. பத்மநாதன், ஜனாதிபதி சந்திரிகாவுகது அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு,

வலி வடக்கு. பென்னாலை தனங்கிளப்பு மற்றும் தென்மராட்சி ஆகிய பிரதேசங்கள் கடந்த பலவருடங்களாக சூனியப்பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் ஒன்றரை இலட்சத்திற்கு மேல் மக்கள் குடிபெயர்ந்து அகதி முகாம்களில் பல இன்னல்களுக்குள் தொழில் வாய்பின்றி வாழ்வதை நீங்கள் அறிவீர்கள் இதையிட்டு பல முறை உங்கள் கவனத்திற்கும் அமைச்சாகளின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்றுவரை இந்தப்பிதேசங்கள் யுத்த சூனியப் பிரதேசங்களாகவே உள்ளன.

ஆனால் நாங்கள் சில இடங்களை மீளக்குடியேற்றத்திற்கு அனுமதித்ததையும் நாம் மறப்பதிற்கில்லை. இராணுவ பாதுகாப்பு வலயம் எவ்விடத்தில் தொடங்கியுள்ளது என்றோ அன்றி அவ்விடத்தில் உள்ள இராணுவ பாதுகாப்பு வலயம் பற்றியோ இன்னும சரிவரச் யாருக்கும் தெரியாதுள்ளது.

ஆகவே இதனை மனிதாபிமான முறையிலும் புரிந துணர்வோடும் பரிசலனைக்கு எடுத்து படிப்படியாவது மீளக்குடியேற்றத்திட்டத்தை அமுல்படுத்தும்படி எமது சங்கம் வேண்டுகிறது.

யாழ்ப்பாணத்தில் சுழிபுரம் வரைக்கும் இடையில் உள்ள பொன்னாலையை விடுத்து மீளக்குடியேற்றத்திற்கு அனுமதி வழங்கி மக்கள் குடியேறி விட்டார்கள். இடை நடுவில் எந்தப்பிரச்சினையும் இல்லாத பொனனாலையில் உள்ள 300 குடும்பம் மட்டும் மீளக் குடியேற அனுமதிக்கவில்லை. என்ன காரணம் என்று இதுவரையிலும் தெரியாதுள்ளது.

இங்கு வாழ்பவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் விவசாயிகளும் மீனவர்களுமே. மீளக்குடியேற்றம இல்லாத படியினால் ஆயிரக்காணக்கான நிலம் விவசாயம் செய்ய முடியாதுள்ளது. மறுவன் புலோவிலும் ஓரளவு குடியேற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது மறுபுறத்தில் பூநகரி சங்குப்பிட்டி வரையும் கௌதாரி முனை வரை மீளக்குடியேற்றத்திற்கு அனுமதிவழங்கி மக்கள் மீளக்குடியேறிவிட்டார்கள். கேரதீவுக்கிடையிலுள்ள குடியேற்றத்தை மட்டும் மீளக்குடியேற விடுவர்களாயின பல விவசாயிகள் நன்மையடைவார்கள்.

அதுமட்டுமல்ல பூநகரிக்குச் செல்வதாயின் யாழ்ப்பாணத்தில் இருந்து 150 கி.மீ. தூரம் கிளிநொச்சியூடாகவே செல்லவேண்டியுள்ளது. இதனால் பல சிரமங்களை மக்கள் சந்திக்கின்றார்கள் என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருதுடன், உடன் பாிசலனை செய்து நடவடிக்கை எடுக்கும் வண்ணம் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம். (உ)

# இராசி பலன்

**26.05.2004**

**(வைகாசி 13,புதன்கிழமை)**

**சப்தமி மு.இ. 9.09வரை**

**ஆயிலியம் முற்பகல் 10.20 வரை**

**இராகுகாலம் 11.52-1.22மணிவரை**

**சுபநேரம் 4.22-5.52 மணிவரை**

**மேடம்**
காரிய நாசம், மனக்குழப்பம், வியாபர நன்மை, பணத்தட்டுப்பாடு.

**இடபம்**
தன்னம்பிக்கைக்குறைவு, தொழில்கஷ்டம், உஷ்ணரோகம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**
நற்கீர்த்தி, தேக சௌக்கியம், காரிய சித்தி, நண்பர்கள் உதவி.

**கடகம்**
அதிக செலவு, விவாதம், செய்தொழில் மேன்மை, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
வெகுமானம், நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, போசன சுகம்.

**கன்னி**
சோம்பல் நிலை, அமைதிக்குறைவு, காரிய தாமதம், புதியதிட்டமிடல்.

**துலாம்**
எதிர்பார்த்த கருமங்கள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, சயனசுகம், போசனநன்மை.

**விருச்சிகம்**
இடமாற்றம், பிரபுத்தனம், இஷ்ட சித்தி, நன்கொடை.

**தனுசு**
வேலையில் அக்கறை, கட்டுப்பாடு, வீண் பயம், முயற்சி தாமதம்.

**மகரம்**
காரிய தடாங்கல், அஜீரணக்கோளாறு, வீண் பகை, மனக்கவலை.

**கும்பம்**
கீர்த்தி, பிரயாண நன்மை, விருந்துபசாரம், மனோ சௌக்கியம்.

**மீனம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், சத்துரு ஜெயம், பெரியோர் மதிப்பு, ஆரோக்கியம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

***வளவன்***

# சைவ நெறித் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் சைவ நெறித் தேர்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம்திகதி ஆகும். மேற்படி படி வங்கள் தேவைப்படுவோர் 66, கல்லூரி வீதி நீராவியடி யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

# வெற்றி இலக்கை நோக்கி வீறுநடை போடும் இங்கிலாந்து

கிரிக்கெற்றின் தாயகம் என அழைக்கப்படும் இலண்டன் வோட்ஸ்



சதம் அடித்த மகிழ்ச்சியில் நஸார் குஸைன்

மைதானத்தில் நடைபெற்றுவந்த நியூசிலாந்து-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 7விக்கெற்றுக்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் வெற்றிபெறுவதற்கு 282 ஓட்டங்களைப் பெறவேண்டிய இங்கிலாந்து அணி, போட்டியின் 5ஆம் நாளான நேற்று 3 விக்கெற்றினை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இவ் அணிசார்பில் துடுப்பாட்டத்தில் முன்னாள் அணித்தலைவர் நஸார்குஸையின் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும், கிரஹாம் தோப் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

அத்துடன் இவர்கள் இருவரும் பிரிக்கப்படாத 4விக்கெற் இணைப் பாட்டமாக 139ஓட்டங்களையும் பெற்றனர்.

இதேவேளை, இங்கிலாந்து அணி சார்பில் முதல் இன்னிங்ஸில் 112 ஓட்டங்களைப் பெற்ற அன்ருஸ்ரட்ஸ் இரண்டாவது இன்னிங்ஸில் 81 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் மொத்தம் 3 சதங்களும், 9 அரைச் சதங்களும் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**சுருக்கமான ஸ்கோர் விபரம்,**

**முதல் இன்னிங்ஸ**

நியூசிலாந்து அணி:386ஓட்டங்கள், மார்க் ரிச்சட்ஸன்-93ஓட்டங்கள், கிறிஸ்கெயின்ஸ்-82ஓட்டங்கள், ஜேக்கப் ஓரம்-67ஓட்டங்கள், ஹர்பிசன்-126/4.

இங்கிலாந்து அணி:-441ஓட்டீங்கள், அன்றூ ஸ்ட்ரஸ்-112, மார்க்கஸ் ரெஸ்கோதிக்-86ஓட்டங்கள், அன்றூ பிளின்ரோல்-63ஓட்டங்கள் மார்ட்டின்ஜீ94/3

**இரண்டாவது இன்னிங்ஸ்**

நியூசிலாந்து அணி:-336ஓட்டங்கள் மார்க் ரிச்சட்சன்-101ஓட்டங்கள் மக்கூலம-96, ஹார்மிசன்-4விக்கெற், நாதன் அஸ்ரில்-49

இங்கிலாந்து அணி:-3விக்கெற் இழப்பிற்கு 282, நஸார்குஸையின்-ஆட்டமிழக்காமல்-103, அன்றூ ஸ்ரட்ஸ்-81

கிரஹாம்தோப்ஆட்டமிழக்காமல் 51,

(உ-121,68)



இங்கிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரெஸ்கோதிக்கிற்கு பந்துவீசி, அவரின் பிடியினை தானே எடுத்த மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில்.



இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் மார்க் புச்சரின் பிடியினை எடுக்கும் நியூஸிலாந்து அணியின் தலைவர் ஸ்ரீபன் பிளமிங்.

# பங்களாதேஷுடன் மோத அனுபவம் வாய்ந்த வீரர்கள்

## மேற்கிந்தியத் தீவுகள் தெரிவு செய்தது

பங்களாதேஷ் அணிக்கெதிராக எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு மேற்கிந்திய தீவுகள் அணி அனுபவம் வாய்ந்த வீரர்களைத் தெரிவு செய்துள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின்போது கையில் ஏற்பட்ட காயம காரணமாக விளையாடாதிருந்த அணித் தலைவர் பிறையன்லாரா டெஸ்ட் குழுவில் இடம் பெறுகிறார்.

அத்துடன்,13வீரர்களைக்கொண்ட மேற்கிந்தியக் குழாமில் ஒரேஒரு வீரர் மட்டுமே அறிமுக வீரராவர். வேகப்பந்து வீச்சாளர் ரவிராம் போல என்பவரே 13பேர் அடங்கும் அணியின் புதுமுக வீரராவர்.

19வயதுடைய ரவிராம் போல் 14 ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ளார். இவர்களைத் தவிர அணியின் உபதலைவர் ராம் நரேஸ்சர்வான், கிறீஸ்கெயில்,டெவன் ஸ்மித், சிம்நரேன் சந்திரபோல், பெவன் ஸ்மித், றிட்லி ஜேக்கப்ஸ், ரினோபெஸ்ற், விடல் எட்வேட்ஸ், ஜேமைன் லோஸன், பெற்ரோக் கொலின்ஸ், டேவ் முஹமட், ஆகியோரும் குழாமில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது (உ-121)

# விளையாட்டுப் போட்டி

(கோப்பாய்)

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி எதிர்வரும் யூன் மாதம் 4,5,6ஆம் திகதிகளிலும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் 10,11,12ஆம் திகதிகளிலும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

(உ-117)

# ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே மல்லேஸ்வரியின் ஒரே இலட்சியம்

(புதுடில்லி)

சிட்னி ஒலிம்பிக் போட்டியில் தவறவிட்ட தங்கப்பதக்கத்தை எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில பெறுவதே தனது இலட்சியம் என்று ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற ஒரே இந்திய வீராங்கனையான மல்லேஸ்வரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டு நடைபெற்ற சிட்னி ஒலிம்பிக் போட்டியில் பளு தூக்கும் பிரிவில் மல்லேஸ்வரி வெண்கலம் வென்றமை தெரிந்ததே. அதன்பிறகு இரண்டரை ஆண்டுக்கு பிறகு மீண்டும் பயிற்சியை அவர் தொடங்கியுள்ளார்.

வெங்களூரில் உள்ள இந்திய விளையாட்டு ஆணையத்தின் தென்னக மையத்தில் தீவிரப் பயிற்சியில் மல்லேஸ்வரி ஈடுபட்டுள்ளார்.

தற்போது 28வயதாகும் மல்லேஸ்வரி, சிட்னி ஒலிம்பிக்கில் கிளின் அண்ட் ஜெர்க் பிரிவில் 137கிலோ எடையைத் தூக்கினேன். ஆனால் தொழில்நுட்பக் காரணங்களைக் காட்டி அதை ஏற்கவில்லை. இருப்பினும் வெண்கலப்பதக்கத்தை வென்றேன்.

அப்போது முதலே ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கத்தை வெல்ல வேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்து விட்டது. அதற்காக தற்போது தீவிர பயிற்சியில் உள்ளேன்.

சிட்னி ஒலிம்பிக்கைவிட தற்போது போட்டி அதிகமாகவிருக்கும். இருப்பினும் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற ஆர்வம் உந்துதல் அதிகரித்து வருகிறது. என்று கூறியுள்ளார்.

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாலய மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.2.30மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் மா.செல்வராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கல்விக்கோட்டப் பணிப்பாளர் சி.செல்லையாவும் சிறப்பு விருந்தினராக பட்டயக் கணக்காளரும் பாடசாலையின் பழைய மாணவருமான ஜி.சுவாதிதன் சர்மாவும் கௌரவ விருந்தினராக செல்வி ம.தேவ மனோகரியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ)

# அதிர்ச்சித் தோல்விக்கு ஆளானார் அகஸ்ஸி

முன்னாள் சம்பியனான அமெரிக்காவின் ஆந்தரே அகஸ்ஸி, பிரான்ஸ் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றிலேயே அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

டெனனிஸ் போட்டிகள் பரிஸில் நேற்று முன்தினம் தொடங்கியுள்ளன.

அதே நேரத்தில் முன்னாள் சம்பியன் கார்லஸ் மோயா தாய்லாந்தின் பாரடான் ஸ்ரீசாப்பன் ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் பிரிவில் நடப்புச் சம்பியனான பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின்-ஹார்தனி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அகஸ்ஸி தரவரிசையில் 271-வது இடததில் உள்ள பிரெஞ்ச் வீரா ஜெரோம் ஹேனலிடம் 4-6, 6-7, 4-7, 3-6, என்ற கணக்கில் இவர் தோல்வியுற்றார்.

இப் போட்டியில மிகவும் வயதானவரான 34 வயதுடைய அகஸ்ஸி 16வது முறையாக பிரான்ஸ் டென்னிஸ் போட்டியில் பங்கேற்கிறார்.


1987இல் விளையாடத் தொடங்கிய அவர் 1998ஆம் ஆண்டு பிரெஞ்ச் ஓப்பின் போட்டியின் முதல் சுற்றில் தோல்வியடைந்தார். தனது நீண்டகால ஆட்டத்தில் 800-வது வெற்றியைப் பெறும் ஆர்வத்துடன் களத்தில் இறங்கிய அகஸ்ஸி, தகுதிச் சுற்றில் பெற்றிபெற்று போட்டிக்கு வந்த ஹேனலிடம் தோல்வியுற்றார்.

கடந்த 3ஆண்டுகளாக கால் இறுதிவரை முன்னேறிய அகஸ்ஸி 1999இல் மட்டும் பிரான்ஸ் ஓப்பின் பட்டத்தை பெற்றுள்ளார்.

ஹேனல் முதல் முறையாக இப் போட்டியில் பங்கேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

# விளையாட்டுச் செய்திகள்



நியூஸிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் 3 வீக்கெற்றுக்களால் வெற்றிபெற்ற மகிழ்ச்சியில் துள்ளிக்குதிக்கும் இங்கிலாந்து அணியினர்.

# தென்னாபிரிக்கா — இலங்கை இடையில் ஜூலையில் மோதல்

தெனனாபிரிக்கா மற்றும் இலங்கை கிரிக்கெற் அணிகளுக்கிடையிலான கிரிக்கெற் போட்டிகள் எதிர்வரும ஜூலைமாதம் இலங்கையில், ஆரம்பமாகவுள்ளன.

இவ்விரு அணிகளுக்குமிடையில் இரண்டு டெஸ்ட் போட்டிகளும், 5 ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன.

இதறகு முன்னதாக நடைபெறவுள்ள ஆசிய கிண்ண ஒருநாள் சர்வதேச கிரிகெற் போட்டித்தொடரில் கலந்துகொண்ட பின்னர் தென்னாபிரிக்க அணியினர் இலங்கைக்கான கிரிக்கெற் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி தென்னாபிரிக்க அணியினர் இலங்கை வந்தடைவார்கள் என்றும், ஜூலை 30ஆம் திகதி முன்னோடியாட்டமொன்றில் விளையாடவிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்விரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதிமுதல் 8ஆம் திகதிவரை காலியில் நடைபெறவிருககின்றன. இரண்டாவது டெஸ்ட் போட்டி ஓகஸ்ட் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை கொழும்பிலும் நடைபெறவிருக்கின்றது.

இதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள ஐந்து ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இரணடு தம்புள்ளையிலும் ஏனைய 3 போட்டிகள் கொழும்பிலும் நடைபெறவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.(உ-68)

அறிவுடை யார் ஆவதறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர் - குறள்

வலம்புரி

# சமாதானத்தைக் குழப்பும் முயற்சியில் படையினர்

ஐக்கிய தேசிய முன்னணி அரசும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இப்போதும் நடைமுறையில் உள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிப் பலம் இழந்த பின்னரும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா யுத்தநிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிக்குமாறு படையினருக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவு உண்மையில் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். எனினும் ஜனாதிபதியின் உத்தரவை படையினர் எந்தளவு தூரம் கடைப்பிடிக்கின்றனர் என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் மேற்கூறப்பட்ட ஆய்வுக்குக் காரணமாக அமைந்துள்ளது. அதாவது, விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்டத் தளபதியாக இருந்த கருணாவிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த கருத்தியல் வேற்றுநிலை, அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்கள் யாவும் நடந்து முடிந்து மறைந்துபோன செய்திகளாகும்.

எனினும் அந்த நிகழ்வுகளின் எச்சமாக, கிழக்கு மாகாணத்தில் இடைஇடையே இடம்பெறும் கொலைச சம்பவங்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்றதா? என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. கருணாவின் பெயரைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தில் படையினரே தாக்குதல் சம்பவங்களை நடத்துவதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இக் குற்றச்சாட்டை சாதாரண விடயமாக ஜனாதிபதியோ, அரசோ கருதிவிடலாகாது. ஏனெனில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிக்க வேண்டியவர்களில் ஒரு பகுதியினர் விடுதலைப் புலிகளாவர். அவர்கள் உடன் படிக்கையை மிகக் கண்ணும் கருத்துமாக கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்நிலையில் படையினர் குறுக்குப் பாதையால் செல்ல முற்படுவார்களாயின் அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடமையில் இருந்து விடுதலைப் புலிகளும் விலகிக்கொள்ள முடியாது. இத்தகையதோர் சந்தர்ப்பத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கை குழப்பமுறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

தற்போதைய சமாதான சூழ்நிலை என்பது யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிப்பதிலேயே தங்கியுள்ளது. அரசும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை நடத்தி அதன்மூலம் ஒரு தீர்வுத் திட்டத்தை எட்டலாம். அல்லது விலகிப் போகலாம். இவை இருதரப்புப் பேச்சுக்களின் மூலம் அறியப்பட வேண்டிய விடயம்.

ஆனால் சமாதானப் பேச்சை இருதரப்பும் நடத்துவதற்கு ஆதாரமாக, அடிப்படையாக அமைந்திருப்பது யுத்தநிறுத்தம் என்பதை எவரும் மறந்துவிடலாகாது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் எங்கேனும் துளைகள், கிழிஞ்சல்கள் ஏற்படுமாக இருந்தால் சமாதானப் பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லாது போகும். எனவே அரசும், விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையினை கண்ணும் கருத்துமாக பாதுகாப்பதிலேயே எதிர்கால சமாதானத் திட்டங்களின் நகர்வுகள் சாத்தியமாகும்.

நிலைமை இவ்வாறாக இருக்கும் போது கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடக்கின்ற சம்பவங்கள் மற்றும் கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் படுகொலைகள் போன்றவை, சமாதானத்தின் ஆணி வேரை அறுக்கின்ற நோயாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

குறிப்பாக கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் படுகொலைகள் ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடைபெறுவதால், விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை படையினர் எவ்வகையிலும் நிராகரிக்க முடியாது.

எனவே, கிழக்கு மாகாணத்தில் நடைபெறுகின்ற விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதியும் அரசும் அதிகூடிய கவனம் எடுத்து நிலைமையை சுமுகமாக்க வேண்டும். இல்லையேல் நிலைமை படுமோசமாக மாற்றமடைவதுடன், சமாதான முயற்சிகளின் போது கிழக்கு மாகாண மக்களின் ஒத்துழைப்பைப் பெற முடியாமற் போகும் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

## இந்திய அரசு புலிகள் மீதான தடையை நீடித்தமை

# ஈழத் தமிழரை அழிக்க இலங்கை அரசுக்குத் துணைபோகும் செயல்

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் ஆட்சிப் பீடம் ஏறியுள்ள புதிய அரசு விடுதலைப்புலிகளை மீண்டும் தடை செய்திருப்பது, இலங்கை அரசின் பொய்ப்பிரசாரம், உலகின் பல்வேறு நாடுகளிலும் அம்பலமாகியும் இந்திய தேசம் இதனை உணரவில்லையா, அல்லது இலங்கை அரசுடன் சேர்த்து ஈழத்தமிழரை அழிப்பதற்கு இந்தியா துணை போகிறதா? என்றெல்லாம் எண்ணத்தோன்றுகிறது. இந்தியாவின் இச் செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அத்தோடு இந்தியா இத்தடை உத்தரவு தொடர்பாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் கோருகின்றோம்.

தமிழ்த்தேசிய விழிப்புணர்வு கழகம் சார்பில் அதன் தலைவர் சி. சிவசுதன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அச் செய்திக்குறிப்பில் மேலும்,

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் தமிழினத்தை அளித்து இதனை ஒரு பௌத்த சிங்கள நடாக உருவாக்கும் முயற்சியில் சிங்களப்பேரினவாதிகள் முயற்சி செய்து வந்தபோது திட்டமிட்டு தமிழினம் அழிக்கப்படுவதை பெறுக்கமுடியாத தமிழ்த் தலைவர்கள் அதனை எதிர்த்து அகிம்சை வழியில் போராட்டங்களை முன்னொடுத்து எதிர்ப்புத்தெரிவித்தனர்.

இதனையும் பேரினவாதிகள் தமது அடாவடித்தனத்தால் முறியடித்து தமிழின அழிப்பைத்தொடர்ந்தும் மேற்கொண்டுவந்தபோது தமிழ் இளைஞர்கள் பொறுக்க முடியாது ஆயுதம் ஏந்த வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

இவ்விளைஞர்களின் ஆயுதப்போரட்டத்தையும் முறியடிக்கலாம் என பகல் கனவு கண்ட பேரினவாதிகள் காலப்போக்கில் தம்மால் தனித்து புலிகளை அழிக முடியாது என்பதை உணர்ந்துகொண்டனர்.

இதனால் உலக நாடுகளின் உதவியுடன் தான் எமது விடுதலைப் போராட்டத்தை அழித்து அதன மூலம் தமிழனத்தை அழிக்கலாம் எனக் கருதிய இலங்கை அரசு இதற்குரிய தந்ரோபாயமாக புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியது.

புலிகளை தமிழ் மக்கள் ஏற்கவில்லை புலிகள் தமிழ் மக்களை கொடுமைப்படுத்துகிறார்கள். என உலக நாடுகளிற்கு இலங்கை அரசு பொய்ப்பிரசாரம் செய்து புலிகளை தடை செய்து பயங்கரவாத ஒழிபபிற்கு உதவும் படி உலக நாடுகளைக்கேட்டுக்கொண்டது.

இக்கருத்துக்களை நியாயப்படுத்தி தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத இலங்கை அரசுக்கு விலை போன, சலுகைகளுக்கு அடிமையான தமிழ் மக்களால் மன்னிக்க முடியாத இலங்கை அரசின் அடிமைகளாக இருந்த தமிழினத்தின் துரோகிகள் சிலரையும் பயன்படுத்தியது.

இதனால் புலிகளை சில நாடுகள் தடைசெய்தன. இதில் இந்தியாவும் ஒன்று என்பது வேதனைக்குரியது. இது இவ்வாறாறிருக்க 20 ஆண்டுகளாக தமிழ் மக்களின் விடுதலையை அடிப்படை நோக்கமாகக் கொண்ட விடுதலைப்புலிகளின் மீது இத்தகைய தப்பபிப்பிராயங்களை இலங்கை அரசு உலக நாடுகள் மத்தியில் ஏற்படுத்தி வருவதை தமிழ் மக்களும் அறிந்து கொண்டனர்.

இவற்றை முறியடித்து விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதையும் பயங்கரவாததிகள் அல்ல என்பதையும் அது ஒரு விடுதலை அமைப்பு என்பதையும் சர்வதேசத்திற்கு உணர்த்தவேண்டும். எனச் சிந்திதது பல்வேறு பட்ட நடவடிக்கை மூலம் தமிழ் சமூகம் ஒட்டுமொத்தமாக எமது விடுதலை நாயகர்களான விடுதலைப்புலிகளின் பின்னால் அணி திரண்டுள்ளது.

அத்தோடு விடுதலைப்புலிகளின் கடந்த இரண்டு ஆண்டுகளாக இடம்பெற்ற சமாதானப பேச்சுக்களின் போது இலங்கை அரசு பல போராளிகளை கொலை செய்யத போதும் அத்துமீறி பல கப்பல்களை தாக்கியபோதும் பொறுமை காத்து விடுதலையே ஒரே நோக்கம் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். இதனை இன்று சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது. மக்கள் விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவாக நிக்கிறார்கள் என்பதை புரிந்துள்ளது.

இதனால் தான் பல நாடுகளும் புலிகளை உத்தியோகபூர்வமாக அழைத்து அவர்களது கருத்துக்களை அங்குள்ள மக்களுக்கு சென்றடையக் கூடிய வகையில் வரவேற்றுள்ளனர் என்று குறிப்பிடபட்டிருக்கின்றது.

(உ)

# தபாலட்டையின் விலையை குறைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தபாலட்டையின் விலையை மூன்று ரூபாயிலிருந்து ஒரு ரூபாயாகக் குறைப்பதுடன் மட்டுமல்லாமல் இதற்கு மானியம் வழங்கி எக்காலத்திலும் இது விலைமாறிலியாக இருக்க உறுதி செய்து உதவுமாறு தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சை சலன சித்திரம் அமைப்புக்கள் கோரியுள்ளது.

சமூக மேம்பாட்டுக்காகப் பாடுபடும் நற்பணி மன்றங்கள் தமது சமூகப் பணிகளைச் சிக்கனமாகவும் சிறப்பாகவும் முன்னெடுக்க இவ்விலைக் குறைப்பு பேருதவியாய் அமைவது நிச்சயம். அத்துடன் தபாலட்டையையே தமது தகவல் பரிமாற்றச் சாதனமாகப் பயன்படுத்தும் வறிய மக்களும இதனால் பெரும் நன்மையடைவர் என்பதும் உண்மை எனவும் சலன சித்திரம் சுடடிக்காட்டியுள்ளது.

(உ)

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றும் இப்பிறவியிலேயே ஒருவன் இறைவனை அடைய முடியாது. போனால் அவன் வீணிற்பிறந்தவனே ஆவான். எண்ணெயில்லாது விளக்கு எரியாது போல கடவுளில்லாது மனிதன் வாழ முடியாது.

சுவாமி விவேகானந்தர்.

# அந்நியக் கலைகளின் ஆக்கிரமிப்பை அகற்றக் கோருகிறது சலன சித்திரம்

*18 கோரிக்கைகளை முன் வைத்து ஜனாதிபதிக்கு கடிதம்*

(யாழ்ப்பாணம்)

அந்நியக் கலைகளின் ஆக்கிரமிப்பு மற்றும் வீதிகளுக்கு இடப்பட்டிருக்கும் அந்நியரின் பெயர்களை அகற்றுமாறு சலன சித்திரம் அமைப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கோரியுள்ளது.

இது தொடர்பில் 18 கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றையும் அந்த அமைப்பு உலகப் பண்பாடுத் தினமான கடந்த 21 ஆம் திகதியன்று அனுப்பி வைத்துள்ளது.

தேசியக் கலையின் தனித்துவம் காக்கப்பட வேண்டும் சீரழிவுப் போக்கிலிருந்து எமது சமூகம் மீட்கப் படவேண்டும் இதற்காக அவசர அவசியமாக நிறைவு செய்யப்பட வேண்டியதென நாம் கருதும் 18 கோரிக்கைகளை உலகப் பண்பாட்டுத் தினமான இன்றைய நாளில் தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மடலில் எமது 18 கோரிக்கைகளும் தரப்பட்டுள்ளன இக் கோரிக்கை மடலின் பல இலட்சம் பிரதிகள் நாடெங்கும் விநியோகிக்கப்படவுள்ளன. உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொண்டு இக்கோரிக்கைகள் தங்களால் நிறை வேற்றப்படும் என்று நாம் நம்புகின்றோம். சிறு கால அவகாசத்தின் பின் மேற்படி கோரிக்கைகளை நிறைவு செய்யும் நடவடிக்கையில் எமது அமைப்பு நேரடியாக ஈடுபட முடிவு செய்துள்ளது என்பதையும் தெரியத் தருகின்றோம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- ★ அந்நியக் கலைகளின் ஆக்கிரமிப்பை அகற்று!
- ★ வீதிகளுக்கு இடப்பட்டிருக்கும் அந்நியரின் பெயர்களை அகற்று!
- ★ ஆபாசத்திற்கெதிரான தணிக்கை விதியைத் தீவிரமாக்கு!
- ★ ஆபாசத் திரைப்படங்களைத் தடைசெய்!
- ★ ஆபாசத்திரை இசைப்பாடல்களை தடை செய்!
- ★ தொலைக்காட்களின் ஆபாசநிகழ்ச்சிகளை தடைசெய்!
- ★ பத்திரிகைகளின் ஆபாசப் பக்கங்களை தடைசெய்!
- ★ ஆபாசப் புத்தகங்களை தடை செய்!
- ★ ஆபாச விளம்பரங்களைத் தடைசெய்!
- ★ மது புகை விளம்பரங்களை தடை செய்!
- ★ சமூகத்தில் சாதி மத பிரதேச பால் வேறு பாடுகளுக்கு நியாயம் கற்பிக்கும் தேசிய கலையின் பிற்போக்கு அம்சங்கள் அனைத்தயையும் தடை செய்!
- ★ தேசியக் கலை எழுச்சிக்கு ஊக்கமளி!
- ★ உழைக்கும் உளளூர்க் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் நலவுரிமையை உறுதி செய்!
- ★ வரலாற்றுக் காலந்தொட்டுத் தேசியக் கலை வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்து அமரத்துவமைடந்த அனைத்துக் கலைஞர்களையும் கௌரவி!
- ★ பள்ளிக் கூடங்களில் பாலியல் கல்வியை அறிமுகப்படுத்து!
- ★ சிறந்த மதநிறுவனம் பொதுமன்றம் கலைச்சங்கம் பத்திரிகை, வானொலி, தொவைலக்காட்சி மற்றும் திரையரங்குகளுக்கு விருது வழங்கு!
- ★ சிறந்த மதகுரு சமூகப் பெரியார், கலைஞர், கல்வியாளர்,மாணவர், ஊடகவியாலாளர், உட்பட நற்பிரஜைகள் அனைவரையும் கௌரவி!
- ★ சுதந்திரதேசியக் கலைக்கொள்கையை உருவாக்க மத நிறுவனங்கள்,மதக் கலைச்சங்கங்கள், பல்கலைக் கழகங்கள்,பள்ளிக்கூடங்கள், ஊடகங்கள் மற்றும் பல் துறை கலைஞர்களையும் ஒன்றிணைத்துக் கலைப் பாராளுமன்றம் அல்லது தேசிய கலைப்பேரவையை நிர்மாணி

ஆகிய கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டுள்ளன. (உ)

### திலங்க சுமதிபால விவகாரம்

# தீர்ப்புக்கூறும் பொறுப்பிலிருந்து மேன்முறையீட்டு நீதிபதி வாபஸ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தாக்கல் செய்த பிணைகோரும் மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிமால் காமினி அமரதுங்க, தீர்ப்பை அறிவிக்கும் பொறுப்பில் இருந்து தான் விலகுவதாக அறிவித்துள்ளார்.

திலங்க சுமதிபால தாக்கல் செய்த பிணைகோரும் மனுமீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெற்றது.

அச்சமயம் மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி டி.எஸ்.விஜயசிங்க மற்றும் நிமால் கமாமினி ரணதுங்க ஆகியோர் தீர்ப்பை அறிவிப்பதை திலங்க சுமதிபால விரும்பவில்லையெனக் கூறினார்கள்.

அத்துடன் நீதியரசர் நிமால் காமினி அமரதுங்க அங்கம் வகிக்காத நீதிபதிகள் குழுவின் முன்னிலையில் வழக்கை விசாரிக்க வேண்டுமெனவும் சட்டத்தரணி விஜயசிங்க கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து தாம் தீர்ப்பை அறிவிக்கப் போவதில்லையென கூறிய நீதிபதி நிமால் காமினி அமரதுங்க விசாரணையை நடத்துவதற்கான நாளை நிர்ணயிக்கும் பொறுப்பை மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரிடம் சமர்ப்பிக்கப் போவதாகத் தெரிவித்தார்.வழக்கை விசாரிப்பதற்காக எதிர்காலத்தில் நியமிக்கப்படும் நீதிபதிகள் குழுவில் தம்மை உள்ளடக்க வேண்டாமெனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (உ-60,10)

## இந்திய.....

இந்தியா, இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலும் உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளது. எனினும் அதற்கான கோரிக்கைகள் இதுவரை விடுக்கப்படவில்லை.

ஏற்கனவே திட்டமிட்டபடி மலையகத்திறகான வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மனித வள உதவிகள் தொடர்பில் மலையகத்திற்கு ஆசிரியர்களை வழங்க இந்தியா முயன்ற போது அதற்கு புத்திஜீவிகளும், ஊடகங்களும் 'றோ' எனப்படும் இந்தியாவின் புலனாய்வுத் துறையின் ஊடுருவல் எனப் பிழையான அர்த்தத்தைக் கற்பித்தன.

இவர்களின் இத்தகைய நடவடிக்கைகளால் வசதிபடைத்தவர்களுககுப் பிரச்சினைகள் இல்லை. ஆனால் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் தான் பெரிய அவலங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

மேலும் இராணுவக் கட்டுபபாட்டுப் பகுதி, இராணுவக் கடடுப்பாடற்ற பகுதிகளில் தனியார் நிறுவனங்களின ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி உதவிகள் குறித்து எந்தவொரு கட்டததிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டிய நிலை இந்திய அரசிற்கு ஏற்படாது. அவசிய உதவிகள் குறித்து வடகிழக்குப் பிரதேசங்களில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டு அபிவிருத்தி குறிதத தேவையான தகவல்களைப் பெறவுள்ளோம். இவ்வாறு தூதுவர் நிருபம்சென் கூறினார்.

நேற்றை இந் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, தர்மலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (த-121)

## கல்வி சாரா ஊழியர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவு

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களுக்கான இடைக்காலக் கொடுப்பனவுகளை வழங்குவற்கு திறைசேரி அங்கீகாரம் அளித்துள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது சம்பள முரண்பாடுகளை நீக்கவேண்டும் என அண்மையில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து அவர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 150 ரூபா இடைக்காலக் கொடுப்பனவாக வழங்கப்பட்டு வந்தது. இக் கொடுப்பனவுகள் கடந்த 2 வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்ததாகவும் ஊழியர்கள் குற்றம்சாட்டி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-60,10)

## பிரதி அமைச்சர்..

லகப் பகுதியில் கறுப்புக் கொடிகளைக் கட்டி செயலக வாயிலில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந் நிலைமையை அறிந்த ஊடகத் துறைப் பிரதி அமைச்சர் யாழ.செயலக விஜயத்தையும் அங்கு நடைபெறவிருந்த சந்திப்புக்களையும் திடீரென ரத்துச் செய்தார்.

இதேவேளை யாழ்.செயலகப் பகுதியில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அமைச்சருக்குரிய பாதுகாப்பினை வழங்குவதற்காகவும் செயலகத்தையும் அதனை அண்டிய பகுதிகளிலும் ஏராளமான படையினரும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதனால் அப்பகுதிகளில் இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன.

இது இவ்வாறிருக்க நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உட்பட பல சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.(த-4)

## சமாதான..

சமாதானச் செயற்பாடுகள் நாட்டின் ஒருமைப்பாட்டையும், இலங்கையின் பாதுகாப்பையும் உறுதி செய்வதாக இருக்க வேண்டும். பயங்கரவாதிகளான புலிகளை அங்கீகரிப்பதன் மூலம் அரசாங்கம் அவர்களுக்குத் தனித்தமிழீழத்தைப் பெற்றுக் கொடுக்கப் போகிறது. புலிகள் பேச்சுக்களுக்கு தமது ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வரவேண்டும்.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பிரசாரச் செயலாளர் அத்துறலிய தேரர் தெரிவித்துள்ளார். (ச-6)

## பேராசிரியர்...

பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் குமாரவேல் தம்பையா சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

கலவித் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் சமூக அபிவிருத்தித் துறையிலும் தமிழ் மக்களுக்கு அளப்பரிய சேவைகளை செயது வந்த குமாரவேல் தம்பையாவின் கொலையை தாம் வன்மையாக கண்டிப்பதுடன் அவரதுகுடும்பத்திற்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கோதுமை.

வழங்காதிருக்கிறது என பிறிமா நிறுவனம் குற்றஞ்சாட்டுகிறது. இவவிடயம் தொடர்பாக திறைசேரி அதிகாரிகள் பிறிமா நிறுவனத்துடன் பேச்சுக்களை நடாத்தியிருந்தும் அப்பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு எட்டப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது.(ச-6)

## எரிக் சோல்..

விடுதலைப்புலிகளைத் திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் அரசு இருப்பதினால் சமாதானப் பேச்சுவார்த்தை பெரும்பாலும் புலிகளினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரமுடைய நிர்வாகசபையில் இருந்தே ஆரம்பிக்கப்படவிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சுட்டிக் காடடியுள்ளன. ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பில் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாக உள்ள விடயங்கள் ஆராயப்பட்டு இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுக்கு வந்திருப்பார்களென தென்னிலங்கை அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டுள்ள நிலையில் எரிக்சோல் ஹெய்ம் இன்று வன்னியில் தமிழ்ச் செல்வனைச் சந்திக்கவுள்ளார்.(ம)

## சோல்ஹெய்ம்...

அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள தடங்கல்களுக்குத் தீர்வுகாணும் இராஜதந்திர நகர்வுகளில் எரிக்சோல் ஹெய்ம் ஈடுபடுவார். (த-121)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கிழக்குப் பல்கலைக்கழக பொருளியற் துறைத் தலைவர் குமாரவேல் தம்பையா அவர்களின் படுகொலை எமக்கு பேரதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய காட்டுமிராண்டித்தனமான செயல் அனைத்துத் தரப்பினராலும் கண்டிக்கத் தக்கதும் வெறுக்கத்தக்கதுமாகும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கபபட்டுள்ளது. நேற்று முன்தினம் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட கிழககுப் பல்கலைக்கழக பொருளியற் துறைத் தலைவர் பேராசிரியர் கு. தம்பையா அவர்களின் மறைவு குறித்து விடுக்கப்பட்ட அறிக்கையில்,

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தல் கல்வி பயின்று கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்விப் பணி புரிந்து அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பல வழிகளிலும் ஈடுபட்ட தம்பையா அவர்களின் படுகொலை தமிழ் பேசும் கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். இத்தகைய கொடூரச் செயல் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கு பெரும் குந்தகமாய் அமைந்து விட்டது.

பல்கலைக் கழகத்தின் கல்விச் செயற்பாடுகளில் இவ்வாறான அநாகரிகமான செயல்கள் மிகப் பெரும் பாதிப்பினை பல்கலைக்கழகத்திற்கு ஏற்படுத்துவதோடு பல் கலைககழகம் சார்ந்த மக்கள் சமூகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.இது போன்ற நிகழ்வுகள் இனிமேலும் தொடர்ந்து நடைபெறாது தடுக்கப் படுவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

அரச இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இச் சம்பவம் இடம் பெற்றதால் அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பு அவர்களுடையதே. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தவர்களாகிய நாம் கிழக்குப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவரான தம்பையாவின் திடீர் மறைவையிட்டு ஆழந்த கவலையடைகின்றோம அன்னாரின் பேரிழப்பினால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு துயரிலும் பங்கு கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம)

# தாம் கடத்தப்படவில்லை யென சத்தியக்கடதாசி சமர்ப்பித்த தேரர்

(கல்கிசை)

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தெலுவல ரத்னசீல தேரர் நேற்று கல்கிசை நீதிமன்றத்தில் சத்தியக் கடதாசி ஒன்றினை சமர்ப்பித்துள்ளார்.

தாம் கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை சத்தியக் கடதாசிமூலம் மறுத்துள்ள அவர் தம்மை இது தொடர்பாக விசாரணை செய்வதை நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

ரத்னசீல தேரர் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறி செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வந்ததை அடுத்தே தேரரினால் சத்தியக் கடதாசி நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (த-121)

# இலங்கையின் அபிவிருத்திக்கு ச.நா. நிதியம் பூரண ஆதரவு

### நிறைவேற்றுப் பணிப்பாளர் உறுதி

(கொழும்பு)

இலங்கையின் சகலவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் சர்வதேச நாணய நிதியம் பூரண ஆதரவை வழங்கவிருப்பதாக அதன் நிறைவேற்று பணிப்பாளர் பி.டி. மிஸ்ரா கூறியுள்ளார்.

நிதியமைச்சர் கலாநிதி. சரத் அமுனுகமவை நேற்று நிதியமைச்சில் சந்தித்துப் பேசியபோதே நிறைவேற்றுப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின் போது இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம மிஸ்ராவுடன் கலந்துரையாடினார். இதன்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அபிவருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் விளக்கிக் கூறப்பட்டது. (ம)

## வவு.தேசிய...

பீடாதிபதி கூறியுள்ளார்.

ஒருவேளை உணவாக உப்புமா கொடுக்கப்பட்டதை சாக்காக வைத்தே 122 மாணவர்களும் கல்லூரியை விட்டு வெளியேறியுள்ளதாக கூறப்படுகின்றது.இது இவ்வாறிருக்க கல்லூரியின் நான்கு சிங்கள மாணவர்கள் தமக்கு அடிகாயமுள்ளதாகவும் அதற்கு சிகிச்சைவழங்க வேண்டுமெனவும் கூறி வவுனியா வைத்தியசாலை வாட்டில் தங்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது. (த-13)

## வெள்ளப்பெருக்கில் 200 பேர் பலி

(ஹெயிட்டி)

கருபியன் பகுதி நாடுகளான ஹெயிட்டி மற்றும் டொமினிக்கன் குடியரசு நாடுகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200ஐத் தாண்டியுள்ளது. மேலும் பலரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.இரண்டு நாடுகளுக்கிடையிலான எல்லைப் பகுதிகளே மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

விவசாய நகரான யிமானிக்கு அருகே இரண்டு நதிகள் கரை கடந்துள்ளன. இதனை அடுத்து அப் பகுதியிலிருந்த வீடுகள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர்கல்லூரி ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினமிரவு பெறுமதிமிக்க தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

வீட்டு உரிமையாளர்கள் உறக்கத்தில் இருந்த வேளையில் ஜனனல் வழியாகப் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந)


## கருத்தரங்கு

**பெண்களின் உடல் நலம் சம்பந்தமான கலந்துரையாடல்**

இடம் : TRRO கேட்போர் கூடம்
4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

காலம் : 27.05.2004 (வியாழக்கிழமை)

நேரம் : காலை 10.30 மணி (புதிய நேரம்)

கருத்துரை வழங்குபவர்: Dr. G. பவானி
(மகப்பேற்று வைத்திய நிபுணர்
யாழ். போதனா வைத்தியசாலை)

உள்ளடக்கம் : பெண்களுடைய உடல்நலம் சம்பந்தமான பிரச்சினைகள், தீர்வுக்கான வழிகள்

குறிப்பு : * ஆர்வமுள்ள அனைவரும் பங்கு பற்றலாம்.
* உங்கள் பிரச்சினைகளை கலந்துரையாடலுக்கு முன் எமக்கு எழுத்து மூலம் அனுப்பிவைக்கலாம்.

*பெண்கள் அபிவிருத்தித் திட்டம்*
*அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,*
*106,4ம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(C-187)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* கணனி பக்க அமைப்பாளர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)
* கணனி பக்க அமைப்பாளர்கள் (பயிலுநர்கள் இருபாலாரும்)
* அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
* ஓப்செட் மெசின் இயக்குநர்கள்
* ஓப்செட் மெசின் பயிலுநர்கள்

தகுதியானவர்கள் தாங்கள் தெரிந்தெடுத்த பதவியை குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, *ஆளணி முகாமையாளர், வலம்புரி, இலக்கம் 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்* எனும் முகவரிக்கு 02.06.2004 க்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

குறிப்பு : யாழ். நகர மையத்திலிருந்து 10km தூரத்திலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்.*

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1ல் இருந்து சகல வகுப்பு மாணவர்களுக்கும் ஆங்கில வகுபபுக்கள், **SPOKEN ENGLISH By.**விக்னேஸ்வரன் ஆச்சாரி **426(302) K.K.S** வீதி யாழ்ப்பாணம்,பிளாக் வீதி, சங்கானை


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.